தொழில்

இந்த இதழில்

		பக்கம்
தலையங்கம் :		
மண்பாண்டத் தொழிலுக்கு தனி காலனி வேண்டும்	...	3
ஜெட் விமானத்தில் பதினாலரை மைல் உயரம் (படம்)	...	5
அறிமுகம் : லட்சுமி பிராண்ட் ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்	...	7
முன்னுக்கு வருபவர் !	...	8
ஸ்கிராப் ஸ்டாக்கிஸ்டுகள் காலதாமதம் செய்வதேன்?	...	8
தொடர்கதை : இணைந்த உள்ளங்கள்	...	9
சிறுகதை : தியாகச்சுடர்	...	14
வாணிபக் கொள்கை	...	17
கவிதை : எனக்குத்தான் பிடிப்பதில்லை !	...	20
தமிழ் நாடு கொடிக்கால் விவசாயிகள் சம்மேளனத்தின் வேண்டுகோள்	...	21
கிண்டியில் தொழில் பண்ணை	...	23
சிறு தொழில் எது	...	23
ராசிபலன்	...	25
சினிமா : வளரும் படங்கள்	...	28

MOHAN INDUSTRIES (Regd).

470, T. H. ROAD,

Madras-21.

MOHAN PAPER CUTTING MACHINE FOR HAND DRIVE

This machine is indispensable to Printing Presses and Binding Offices. Designed for narrow strip cutting and supplied with one extra knife. It is very strong and extremely easy to operate.

Size: 24" Hight of clamp. 5"
" 18" " " " 3".

TREADLE PERFORATOR

Sizes: 18", 20" and 24".

Highly finished and constructed sturdy, treadle drive fitted with English Pins, Polished wooden table and Guide. Modern arrangements are provided to 24" machine to operate even half length.

LEAD & RULE CUTTER

Sizes. 9½", 14" and 18".

Strong and durable with high class steel blade and tension spring. Easy to cut leads and brass rules clean & accurate.

DIE STAMPING PRESS

Fitted with a heavy type handle and two powerful springs. Hand operation for quick return is the important feature of its kind.

HARD PRESS: Siz: 13"×19", 15×21" and 15×21 (Heavy duty)

This is indispensible to Printing Presses and Binding Offices. Strongly built for modern use.

PLEASE CONSULT US FOR ALL YOUR ABOVE MACHINE PROBLEMS

வாழ்க மணமக்கள்!



—●—

தமிழ் திங்கள் வைகாசிமீ 8-ந்தேதி (21-5-58-ல்) தேனம பேட்டை "ஆபட்ஸ்பரி" மாளிகையில், K. சுவாமி மோட்டார் ஒர்க்ஸ் & ஸ்ரீநாராயணன் பஸ் டிரான்ஸ்போர்ட் உரிமையாளரும், யதுகுலமகாசங்க தலைவரும் ஸ்ரீ பெரும்புதூர் தேவஸ்தானதர்மகர்த்தாவும் ஆன ஸ்ரீ C. கிருஷ்ணபிள்ளை அவர்களது திருக்குமாரர் **ஸ்ரீ K. லோகநாதன்,** (Prop. S. N. B. T.) அவர்கட்கும் ஸ்ரீ R. கண்ணப்பா, B. A. இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் ஸ்பெஷல் பிரான்சு, திருச்சிராப்பள்ளி அவர்கள் செல்வப் புதல்வி **லலிதாதேவிக்கும்** சிறப்பாக திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் மணமக்களை வாழ்த்தி மேன்மை தாங்கிய கவர்னர் மேதி, ராஜாஜி, கனம் காமராஜர், ராமையா, பக்தவத்சலம், C. சுப்ரமணியம் முதலிய அமைச்சர்களிடமிருந்தும் M.L.C.—M.C.—M.P. களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் வாழ்த்துக்கள் வந்தன. ஸ்ரீ ஓ. வி. அளகேசன், ஸ்ரீ K. வெங்கடசாமி நாயுடு ஸ்ரீ எம். ராதாகிருஷ்ண பிள்ளை, ஸ்ரீ வ. உ. சி. சுப்பிரமணியம் முதலிய பிரமுகர்கள் திருமணத்தில் கலந்து சிறப்பித்தார்கள். நீதிபதிகளும் M.L.A.க்களும் கலந்து கொண்டனர். அன்று மாலை புதுவை லோகநாதன், சீர்காழி கோவிந்தராஜன் குழுவினர் இன்னிசைக் கச்சேரி நடந்தது. இன்னிசைக்குப்பின் திருமண விழா இனிது நிறைவேறியது.

''அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!''

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1 | சென்னை, 1—7—58 | இதழ் 5

மண்பாண்டத் தொழிலுக்கு தனி காலனி வேண்டும்

ஹரிஜனங்களுக்கு காலனி - நெசவாளர்களுக்குக் குடியிருப்புகள்-மீனவர்களுக்கு வீடுகள் - பழங்குடிகளுக்கு உறையுள்கள்.

ஆம்! சுதந்திர அரசாங்கம், மக்கள் நல அரசாங்கம்,உண்ண உணவும், உடுக்க உடையும் தங்குதடையின்றிக் கிடைக்க உதவிய மக்களாட்சி, பொருளாதாரத் துறையில் பின்தங்கியுள்ள துர்ப்பாக்கிய சாலிகளான மக்கள் இயற்கையின் திரு விளையாடல்களுக்கு இறையாகாமல்வாழ்வதற்காகத்தான் காலனிகளும், குடியிருப்புகளும், வீடுகளும், உறையுள்களும் கட்டிக் கொடுத்து வருகின்றது. நன் மக்கள்யாரும் நன்றி பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனல்........

'மிகவும் பிற்போக்கிலுள்ள வகுப்பினர்' என்று மாநில அரசாங்கத்தார் அறிவித்துள்ள பட்டியலில் இடம் பெற்றுள்ள பாட்டாளிகள்—மண்பாண்டங்கள் செய்து வாழும் வேளாளர்கள் வாழ சிறு வீடுகளும், தொழில் செய்யச் சிறு தொழில் பேட்டைகளும் அமைத்துத் தருவது அவசியமானது; அவசரமானதும் கூட. செய்த நற்பணிகளுக்கு நன்றி பாராட்டுகையில் செய்யவேண்டிய பணிகள் நினைவுக்கு வருவது இயல்புதானே?

பாமர மக்களாகிய மண்பாண்டத் தொழிலாளர்கள் தொழிலுக்கு வேண்டிய வசதிகளின்றி அல்லல்பட்டு வருவது மாநில சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் தெரியும்.

மண்பாண்டத் தொழிலை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய பல திட்டங்களை சர்க்கார் தீட்டியும் கணிசமான பலன் இல்லை. மண்பாண்டத்தொழிலில் உள்ளவர்களுடன் அதிக தொடர்பு கொண்டோ அல்லது அவர்களது ஆலோசனையைக் கேட்டோ திட்டங்கள் வகுத்திருந்தால் உண்மையிலேயே உருப்படியான நற்பயன்கள் விளையும். மட்பாண்ட உற்பத்தியாளர்களுக்கு அடிப்படைத் தேவைகள் என்ன? இருக்க இடமும், மண்ணெடுக்க மனையும் இன்றியமையாத முதல் தேவைகள். விறகு வைக்கோல் போன்ற எரி பொருட்கள் மலிவான விலையில் கஷ்டமின்றிக் கிடைக்க வகை செய்வது அடுத்த படியாக அவசியம். இவை அனைத்தும் கிடைத்தாலும் அவரவர்கள் காலையில்

வருந்துகிறோம்!

தமிழ் நாட்டின் தொழிற்சங்கத் தலைவர்களின் முன்னணி வீரர் திரு. V. சக்கரை செட்டியார் அவர்கள் அண்மையில் மறைந்தமை குறித்து மிகவும் வருந்துகிறோம். தமிழ் நாட்டின் தொழிற்சங்கத் தந்தையர் திரு. வ. உ. சி., திரு. வி. க. போன்ற பெரியார்களுடன் நெருங்கிய உறவு கொண்டவர் திரு. சக்கரை செட்டியார் அவர்கள்.

அன்பு, உண்மை, இன்னுமை ஆகிய நற்பண்புகளுக்கு உறைவிடமாகத்திகழ்ந்தவர். தெய்வ பக்தியுள்ள கிறிஸ்தவர் ஒழுக்கசீலர் திரு. செட்டியார் அவர்கள். அவர் புகழ் தொழிற் சங்க இயக்கம் உள்ளளவும் நிலைத்து வாழும். மறைந்த அமரவீரரின் குடும்பத்தினருக்கு நம் ஆறுதல் உரித்தாகுக. திரு. செட்டியார் அவர்களின் திருவுருவப்படம் ''தொழில்'' இதழின் முகப்பை அலங்கரிக்கிறது.

கதிரோன்தோன்றும் முன்பிருந்து மாலையில் பகலவன் மலைவாயில் விழுந்த பின்பும் வேலை செய்து உருவாக்கும் மண்பாண்டங்களை சூளை போடுவதற்கு போதிய காலிமனைகளைக் கொண்ட இடங்கள் தேவை. தகுந்த இடங்கள் இல்லாததினல் ஆங்காங்கு சூளை போடுகின்ற போது நகரசபை அதிகாரிகள் ஒரு புறமும், போலீஸ் அதிகாரிகள் ஒருபுறமும், அருகில் வாழும் மக்கள் ஒரு புறமும், ராஜ்ய முழுவதும் சூளை போடுவதற்கு தகராறுகள். இடைஞ்சல்கள்! இந்த இன்னல்கள் மாநில சர்க்காருக்கு நன்கு தெரியும். மண்தோன்றியகாலந் தொட்டு நடந்துவரும் மட்பாண்ட தொழில்—குடிசைத் தொழில் என்ற சொல்லுக்கே இலக்கணமாக உள்ள தொழில்—நசுங்கி விடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலையில் அம்மக்கள் வாழ்கின்றார்கள்.

மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் சேர்ந்து பல தொழில்களின் வளர்ச்சிக்காகத் "தொழிற்பேட்டைகள்" (Industrial Estates) நிறுவி வருவதையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனல் பாவம் செய்த மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு "தொழில் பேட்டைகளில்" இடமளிக்காதது மிகவும் வருந்தத்தக்கது. மண்பாண்டத் தொழிலுக்கு காலனி நிறுவ கோடிக் கணக்கில் பணம் தேவையில்லை. ஒரு சிறு முதலுடன் அதிகச் செலவில்லாமல் சிக்கனமான முறையில் மண்பாண்ட உற்பத்தியாளர்களுக்கு ஒரு தனிக்காலனி நிறுவவேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

144850

மண்பாண்ட உற்பத்தியாளர்கள் பல மாநாடுகள் நடத்தி பல தீர்மானங்களை நிறைவேற்றி மாநில சர்க்காருக்கு அனுப்பியிருக்கின்றனர். சர்க்காரிலுள்ள அதிகாரிகள் விரைவில் உருப்படியான நடவடிக்கைகள் எடுத்து மண்பாண்டத் தொழிலாளர்கட்கு ஏற்பட்டுள்ள இன்னல்களிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும். மந்திரிமார்கள் பலரும் இந்தப் புராதன தொழிலின் சிறப்பையும், பல லட்சக் கணக்கான மக்களுக்கு இத்தொழில் பிழைப்பளித்து வருவதையும் அறிவார்கள். இவர்களது கஷ்டங்களும் தெரியும். இன்னல்களைப் போக்கவேண்டுமென்ற ஆர்வமும் உடையவர்கள். அதிகாரிகளை சிறிது இயக்கிவைத்தால்காரியம் விரைவில் நடந்துவிடும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

மற்றொன்று, மண்பாண்டத்தொழில் வளர்ச்சியை மக்களுக்கு விளக்கிக் காட்ட அரசாங்கம் நாடு முழுவதிலும் பல கண்காட்சிகள் நடத்தவேண்டும். மற்ற மாநிலங்களில் இவ்விதக் கண்காட்சிகள் அடிக்கடி நடத்தப்பெறுவதாக அறிகிறோம். சென்னை அரசாங்கமும் கண் திறந்து கருணை காட்டுவது கடமை. தவிர, தலைநகரில் நிலையான ஒரு பொருட்காட்சியும் (மியூஸியம்) மண்பாண்டத் தொழிலுக்குத் தேவை. விரைவில் நன்மை பிறக்குமென நம்புகிறோம்.

எழுதி அனுப்புங்கள்!

வர்த்தகம், பல வேறு தொழில்கள் பற்றிய கட்டுரைகளை "தொழில்" வரவேற்கிறது. வர்த்தக சபைகள், தொழில் சங்கங்களின் கூட்டங்கள், மகாநாடுகள், தீர்மானங்கள் பற்றிய செய்திகளையும் சுருக்கமாக எழுதி அனுப்பினல் வெளியிடுவோம். முடிந்த வரையில் தமிழிலேயே செய்திகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அரசியல், இலக்கியம், கலை பற்றிய கட்டுரைகளும், புகைப் படங்களும் வரவேற்கப் படுகின்றன. கவிதைகள், கதைகள், சிறு நாடகங்கள் முதலியவற்றையும் மகிழ்ச்சியுடன், "தொழில்" வெளியிடும்.

எழுதி அனுப்புங்கள்; பிரசுரிக்கிறோம்!

ஜெட் விமானத்தில் பதினாலரை மைல் உயரம்



இடப்புறம் நிற்பவர் வானவெளி விமானி ஜார்ஜ் வாட்கின்ஸ். அவர் அமெரிக்கக் கடற்படையில் லெப்டினென்ட் கமாண்டர்; எட்வர்ட்ஸ் விமானத் தளத்திலிருந்து அவர் ஒரு ஜெட்விமானத்தில் 76,823 அடி உயரம் பறந்து திரும்பினர். வலதுபுறத்தில் காணப்படும் ஜான் நாரிஸ், வாட்கின்ஸைப் பாராட்டுகிருர். (ஜான் நாரீஸ் இந்த ஜெட் விமானத்தைச் செய்த கம்பெனியைச் சேர்ந்த விமானி.) சாதாரண விமானத்தில் இதுவரை ஒருவரும் இவ்வள்வு உயரம் பறந்ததில்லே. இது ஒரு உலக ரிக்கார்டு.

JAGANNATHA BRAND STEEL TRUNK WORKS

(Prop. S. NATESA NAICKER)

Factory at:—27, MALAYAPPAN STREET,

Mannady, Madras-1.

Branch :

52, 33, NYNIAPPA NAICKEN STREET,

P. T. MADRAS-3.

★

MANUFACTURER OF

Best steel Trunks, Suit Cases, Hindustan Cabins, Special Boxes etc.,

★

Always ask for our Hindustan Cabins

Renowned all over India



Our motto is to Satisfy our customers

அறிமுகம்

("சிசு")

[இந்தப் பகுதியில் சிறு அல்லது குடிசைத்தொழில்களில் உற்பத்தி செய்யப்படும்பண்டங்கள் பற்றி நம் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறோம். உற்பத்தியாளர்கள் கட்டணம் செலுத்தாமல் இந்த அறிமுக வாய்ப்பை பயன் படுத்திக்கொள்ளலாம். ஆனால் பண்டங்கள்மாதிரிக்கு அனுப்பப்படவேண்டுவது அவசியம். "ஆசிரியர், தொழில் (அறிமுகப்பகுதி), சென்னை," என்ற முகவரிக்கு மாதிரிகள் அனுப்பப்படுதல் வேண்டும்.]

லட்சுமி பிராண்ட் ஸ்டீல் டிரங்கு பெட்டிகள்

திரை கடலோடியும் திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். தேடிய செல்வத்தைச் சிறப்பான வழிகளில் செலவிட்டதுடன் சேமித்தும் வைத்தனர், வருங்காலச் சந்ததிகளுக்கு பணத்தைப் பத்திரப்படுத்த பூமிக்கடியில் புதைத்து வைத்த காலமும் உண்டு! அடுக்குப் பானைகளும், மரப் பொந்துகளும் பணப்பெட்டிகளாகவிளங்கியதும் உண்டு! இதெல்லாம் பத்தாம் பசலிக்காலத்தில்! இன்று அழகும் உறுதியும் படைத்த உருக்குப் பெட்டிகளில் பணம் பத்திரமாகப் பாதுகாக்கப்படுகிறது. பணம் வைப்பதற்கு 'காஷ்-பாக்ஸ்' மட்டுமின்றி மடிப்புக் கலையாமல் உடைகளை வைப்பதற்கும், பல விதமான அளவுகளில் கண்ணைக் கவரும் வர்ணங்களில் இன்று ஸ்டீல் டிரங்குகள் தயாரிக்கப்படுகின்றன. தண்ணீர் கூட உள்ளே புக முடியாது. எடுத்துச்செல்வதற்கு லகுவாக இருப்பதுடன் உறுதியாகவும், கனமில்லாமலும் டிரங்குப் பெட்டிகள் தயாரிக்கப் படுகின்றன.

டாக்டர்கள் தம் மருந்துகளை வைத்துக்கொள்வதற்குப் பல சிறு அறைகள் கொண்ட மருந்துப் பெட்டிகளும் உருக்கில் தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் தண்ணீர் மட்டுமல்ல; காற்றுக்கூடப் புக முடியாது! வழியில் தவறி விடாமலும், பிறர் கவரமுடியாமலும் தபால்களை எடுத்து வர வேண்டுமா? அதற்கென உறுதியுடன் கூடிய எஃகு தபால் பெட்டிகளும் இன்று வழங்குகின்றன.

காஷ்-பாக்ஸ், காபின்-சூட்கேஸ், ஸ்டீல் டிரங்க், யுனிபாரம்-கேஸ், மெடிசினல்-பாக்ஸ், தபால்-பாக்ஸ் இவற்றில் எதுவாயிருப்பினும் 'லட்சுமி பிராண்டு' என்றால் அவை உறுதிக்கும், நீடித்த உழைப்புக்கும், வேலைப்பாட்டுக்கும் பேர் போனவை. ஆம் கடந்த சுமார்40 ஆண்டுகளாக ஸ்டீல் சாமன்கள் தயாரிப்பதில் நல்ல அனுபவம் படைத்தவர்கள் திருச்சி லட்சுமி பிராண்ட் ஸ்டீல் டிரங்க ஒர்க்ஸ் ஸ்தாபனத்தார்.

ஸ்தாபனத்தின் நேர்மைக்கும், திறமைக்கும் அதன் அதிபர் தான் பொறுப்பு அல்லவா? லட்சுமி பிராண்டு ஸ்டீல் டிரங்க ஒர்க்ஸ் அதிபர் திரு. டி. பி. வேலுப்பிள்ளை இன்று ஜில்லா பேப்ரிக்கேட்டர்கள் சங்கத் தலைவராகவும், ராஜ்ய சங்க உப தலைவராகவும் விளங்குகிறார் என்றால் அது அவரது ஸ்தாபனத்தின் சிறப்புக்கும், புகழுக்கும் தக்க சான்றாகும்.

எஃகு பெட்டிகள் எந்த மாதிரி வேண்டுமானாலும் ஆர்டர்களின் பேரிலும் செய்து கொடுப்பார்கள். மறவாதீர்கள்!

லட்சுமி பிராண்டு ஸ்டீல் டிரங்க் ஒர்க்ஸ், (Regd.)

தேரடிக்கடைத் தெரு, திருச்சி-

Phone · 2438 Grams: MARIGOLD

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

வளர்ந்து வருபவர்!

சோ. கருணாநிதி

"உருவத்தால் எள்ள வேண்டாம்," என்பது தமிழ் வாக்கு. உருவத்திலும், வயதிலும் இளைஞராக இருப்பினும் எழுத்தில் நல்ல அனுபவம் படைத்தவர் திரு. கருணாநிதி. நல்ல சிறு கதைகள் அநேகம் எழுதியிருக்கிறார். பல நாடகங்களையும் அவரது எழுதுகோல்படைத்துள்ளது. பழந்தமிழ் இலக்கியக் கட்டுரைகள் அவர் எழுத்துக்கே சிறப்பு அளிப்பவை.

படவுலகில் நுழைய ஆர்வம் மிக்கவர். திரு. கருணாநிதியின் படைப்புக்களை பேனா மன்னரும், படவுலக ஜாம்பவானுமான திரு. பி. எஸ். ராமையா பாராட்டியிருக்கிறார். ஆம்! 'வசிஷ்டர் வாயால், பிரம்ம ரிஷி' விருது பெறுவதற்குச் சமம்!

சிறந்த பல நாடகங்களையும், படக்கதைகளையும் சிருஷ்டித்து தனிப்புகழுடன் விளங்கும் எழுத்து வடிவர் திரு. ரா. வெங்கடாசலம்; கதாசிரியர், வசனகர்த்தா, டைரக்டர் ஆகிய விருதுகள் பெற்றுள்ள முன்னணி வீரர் திரு. எஸ். டி. சுந்தரம் போன்றவர்களுடன நெருங்கிய தொடர்பு கொண்டு பயிற்சி பெற்றவர் திரு. கருணாநிதி.

டைரக்டர் சாந்தாராம் சிறப்பு சிருஷ்டியான "சுரங்" (சுரங்கம்) கதையைத்தமிழில் படம் எடுத்துவரும் ரெங்கா பிக்சர்ஸ் ஸ்தாபனத்தில் தற்போது பணி புரிந்து வருகிறார் கருணாநிதி. சிறந்த எதிர்காலம் அவருக்குக் காத்திருக்கிறது. புதுமைக் கருத்துக்களையும், படைப்புக்களையும் தேடும் படாதிபதிகள் திரு. கருணாநிதியை அணுகலாம்.

அவர் முகவரி:

சோ. கருணாநிதி,
283, பைக்கிராப்ட் ரோடு,
சென்னை-14.

ஸ்கிராப் ஸ்டாக்கிஸ்டுகள் கால தாமதம் செய்வதேன்?

—o—

சென்னை சர்க்கார் அங்கீகரித்துள்ள ஒரு சில இரும்பு எஃகுஸ்கிராப் கண்ட்ரோல்டு ஸ்டாக்கிஸ்டுகளிடம் அப்ரூவ்டு பேப்ரிகேட்டர்களும், அப்ரூவ்டு ஸ்கிராப் டீலர்களும், தொழில் வர்த்தக இலாகா அடிஷனல் டைரக்டர் அளிக்கும பர்மிட்டுகளுடன் சென்று சரக்குகள் கேட்கும்போது பணத்தை வாங்கிக்கொண்டு ரசீது மட்டும் கொடுத்து விடுகிறார்கள்.

பல நாட்கள் கழித்து டெலிவரி ரசீதோ அல்லது சரக்கு டெலிவரியோ கொடுக்கிறார்கள். இதனால் பல கஷ்டங்கள் ஏற்படுவது அதிகாரிகளுக்கும் தெரியும். ஸ்டாக்கிஸ்டுகள் கைவசம் சரக்கை வைத்துக் 'கொண்டு பிறகே பர்மிட்டும், ரூபாயும் பெற்றுக்கொண்டு சரக்கு டெலிவரி உடனே கொடுக்க தொழில் வர்த்தக இலாகா அடிஷனல் டைரக்டர் விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்துகிறோம்.

விளம்பர விகிதம்

ராப்பர் 4-வது பக்கம் (இரண்டு கலர்)	100-0-0
,, ,, (ஒரு கலர்)	75-0-0
ராப்பர் உள் பக்கம்	75-0-0
சாதாரண முழு பக்கம்	60-0-0
,, ½ பக்கம்	30-0-0
,, ¼ பக்கம்	20-0-0

காண்டிராக்ட் விளம்பரங்களுக்கு,

அட்வர்டைஸ்மெண்ட் மானேஜர்,
"தொழில்"
55, எடப்பாளையம்தெரு, சென்னை-3

தொடர் கதை:

—புலவர் நா. தேவநாதன்—

முன் கதைச் சுருக்கம்

[செல்வநம்பி (கதாநாயகன்) எஸ். எஸ். எல். ஸி. வரைப் படித்த இளைஞன். மேலும் படிப்பதற்கு அவனுக்கு கொள்ள ஆசை. ஆனால் அவன் குடும்பம் ஏழை உழவர் குடும்பம். இருபது ஆண்டுகளுக்கு முன்பு அவனது தந்தை ஒரு நாளிரவு எங்கோ போய் விட்டார். அவரைப் பற்றித் தகவலில்லை. செங்கழனி ரெட்டியார் என்ற குடியானவர் ஆதரவில் செல்வநம்பியும், அவனது தாய் பொன்னியம்மாளும் வாழ்ந்து வந்தனர். வாழ்வில் முன்னேற நாட்டம் கொண்ட செல்வநம்பி ஒரு நாள் நள்ளிரவு யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டுக் கிளம்பி கால்போன போக்கில் நடக்கிறான். விடிந்து மகனைக் காணாமல் துடித்த தாய் மயக்கம் போட்டு விழுந்து விடுகிறாள்.

வெளியேறிய செல்வநம்பி என்ன செய்கிறான்?......இந்த இதழில் படியுங்கள். ஆ-ர்.]

2. களவுக் கலை!

நள்ளிரவில் புறப்பட்ட செல்வநம்பி, இன்னும் நடக்கும் தொழிலை நிறுத்தவில்லை. அந்த ஜில்லாவின் எல்லையையும் கடந்து விட்டான். கால் வலிப்பதும் அவனுக்குத் தெரியவில்லை. அவன் கருத்து எங்கெங்கோ செல்லுகிறது. கால் ரோடிலேயே நடந்து செல்லுகின்றது.

'கலவி எண்ணங் கொண்டு காதல் வாழ்வை விரும்பித்தான் சென்றுவிட்டானே!' என்று அவன் தாய் நினைத்தாள்.

ஆனால் இந்தக் கட்டழகு உடைய காளை, கல்வி மீது எண்ணங்கொண்டு, கிட்டாதாயின் சாதல் நிலையை வரவேற்க விரும்பிச் செல்லுகிறான். வெய்யில் வளர வளர அவன் முகத்திலும் கருமை வளர்கின்றது. அழகிய மயிர்ச்சுருள் நெற்றியில் அசைந்து படிந்து அலைகிறது- கம்பளித்துணியில் கழுத்து மீது சொட்டும் வியர்வைத் துளியைத் துடைத்துக் கொள்ளுகிறான். அவன் தாய் எண்ணியது போல, அவன் கல்யாணம் விரும்பினால் காதலிக்கும் கன்னிகைகள் கணக்கற்றவர்கள். உழவனுடைய உடல் கட்டே அவனுடைய உயர்ந்த செல்வம் அல்லவா? இத்தகைய கட்டமைந்த உடல் செல்வம் படைத்த செல்வ நம்பி, கருத்தை எல்லாம் கற்றல் மேல் செலுத்திச் செல்லுகிறான். அங்கு ஒரு மரத்தின் நிழலின் கீழ் ஒரு வாராவதியின் மீது சென்று உட்கார்ந்து, வாராவதியை அடுத்துப் பாதையின் பக்கத்தில் உள்ள பாதுகாப்பு நடுகல் மீது காலை வைத்துக்கொண்டான். அவனைப் போன்ற ஒரு உழவன் கபிலை ஓட்டிக்கொண்டிருந்தான்.

ஏறும் வெய்யிலில் ஓயாமல் நடந்த செல்வ நம்பி, சிறிது அலுப்பாற அமர்ந்ததும் அவனுக்குச் சிறிது மயக்கம் உண்டாகியது. மெல்ல இறங்கி வாராவதியின் மீது சாய்ந்து உட்கார்ந்தான். இரவு கூட உணவில்லை. பாவம்! அவனுடைய உடல் வாராவதியின் பக்கத்தில் சாய்ந்து விட்டது.

கபிலை ஓட்டிக் கொண்டிருந்த உழவன், கபிலைப் பள்ளத்திலிருந்து மேலேறி வரும் பொழுது வாராவதியில் இருந்தவனைப் பார்

த்த வண்ணம் வந்தான். அதன் மீதிருந்த ஆள் அங்கும் இல்லை. வயலில் செல்வதும் தெரியவில்லை. 'என்ன ஆச்சரியம்!' என்று எண்ணிக்கொண்டே விரைந்து வந்தான். பாதையை அணுகினன். பக்கத்திலேயே சாய்ந்து கிடக்கும் செல்வ நம்பியைக் கண்டான்.

பாவம்! உருகும் உள்ளம் தானே, உழவர் உள்ளம்! 'களைப்பினல் தான் இவன் இவ்வாறு சாய்ந்து விட்டான்' என்றுபுரிந்து கொண்டான்; சிறிது தண்ணீர் குடிப்பித்தான். சிறிது தெளிவு அடைந்த செல்வநம்பி கண் திறந்து பார்த்தான். முத்து முத்தாக வியர்வைத் துளிகள் முகத்தினின்றும் சொட்டிக் கொண்டு இருப்பதைஅறிந்தான்; பக்கத்திலிருந்த உழவனின் உள்ளங்கண்டு உவந்தான். குளிர்ந்த காற்று வீசும் அந்த இடத்தில் களைப்பு நீங்கி இளைப்பாறுவது சுகமாகத்தான் இருந்தது.

அந்த இடத்தைவிட்டு எழுந்துகொண்டான். உழவன் அவனைக் கைப்பிடித்துக் கொண்டு வந்து ஒரு மரத்தின் அருகில் கபிலைத் தண்ணீர் ஓடும் கால்வாயின் பக்கத்தில் உட்காரவைத்து, மஞ்சள் கரிசலாங் கண்ணி இலையை, வயல் வரப்பிலிருந்து பறித்துக்கொண்டு வந்து, அவன் கையில் கொடுத்தான். அந்த இலையில் செல்வநம்பி பல்துலக்கிக் கொண்டான். வாய்க்கால் நீரில் வாயைக் கொப்பளித்து முகங்கை கால் தூய்மை செய்து கொண்டு, உழவன் கொடுத்த கூழை உவகையுடன் உண்டு 'வேளாளர்கள் என்பவர்கள். உபகாரிகள் தாம். அந்தப் பண்பை நீ இப்பொழுது காட்டினய் இல்லாத புதுமைக் குணம் இருந்தால் தானே புகழவேண்டும்? உழவராகிய நாம் உலகிற்கு அச்சாணி தான். நம் நலத்தின் இந்த நிலையை 'நாம் தான் எண்ணிப் பார்த்து ஓங்கவேண்டும். நெல் விளைவித்து அனைவருக்கும் கொடுக்கின்றோம் நாம். அதை நாம் ஒரு பிடி உண்டு வாழ்வதற்கு ஏற்ற நிலையில் உயரவில்லை! நாம் உண்பது கேழ்வரகுக் கஞ்சி! இது நம் அறியாமையா அல்லது நம் இனத்தவருக்கு மட்டும் விதித்த தலை விதியா? பேசிப் பயனில்லை; பெருமையான இவ்வாழ்வைப் பற்றி' என்று சொல்லி நிறுத்தினன்.

இதையெல்லாம் கேட்டு வியந்த உழவன் 'தம்பி நீ எந்த ஊரு. நம்ம குலத்துப் பிள்ளைபோல இருக்குற. ஏதோ வெறுப்பான நிலையிலிருக்குற போல் இருக்கு'' என்றான்.

செல்வ நம்பி சிறிது மௌனம் சாதித்து 'ஐயா! உங்களுக்குவணக்கம்; நான் தமிழ் நாட்டின் ஒரு ஊரைச் சேர்ந்தவன் என் ஊரைச் சொல்ல மாட்டேன். நான் போகும் இடத்தையும் சொல்ல மாட்டேன். என் பெயர் செல்வநம்பி' என்று அவனைப் பார்க்காமல் எங்கோ பார்த்தவன் போல் நின்றான். உழவனும், 'நான் இத்தொழிலில் காளை. இவன் அவிழ்ந்து ஓடும் காளை' என்று எண்ணி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். செல்வநம்பியும் அந்த இடத்தினின்று நீங்கினன். வழியை நோக்கி நடந்தான்; ஒரு பெரிய ஊர் போய்ச் சேர்ந்தான்.

ஒரு பாதையின் ஓரத்தில் ஒரு மரத்திலே சாய்ந்து கை கட்டிக்கொண்டு நின்று விட்டான். கல்லாதவர்கள் வண்டி ஓட்டிச் செல்வதையும், கூலி வேலை செய்வதையும், தன்னைப் போல் ஏறக்குறைய S.S.L.C.வரை படித்து விட்டு, கையில் காலணா இல்லாமல், நீளமான கால் குழாய்களில் கைவிட்டுச் செல்வதையும், கனமான வயிறு கொண்டவர்கள் காரில் ஏறிச் சவாரி செய்வதையும் கண்டான். உழைப்பால் உயர்ந்து அமைதி பூத்த முகத்துடன் சிலர் காரில் செல்வதையும் கண்டான். இப்பொழுது அவனுக்குக் கிடைப்பதற்கு எளிமையான தொழில் எது?

மூட்டை சுமக்கும் கூலித் தொழில்தான் கிடைக்கும். அது தன்னைக் காத்துக் கொள்ளவே போதாது. அன்பு என்பது அடியோடு இல்லாத தன்மைக்காரன் அல்ல அவன். தன் அன்னையின் மீது அவனுக்கு அளவு கடந்த பற்று உண்டு. தன்னையும் தன் தாயையும் அன்புடன் ஆதரித்த வேளாளர் குடும்பத்தையும் இக்காலத்தில் ஆதரிப்பவர் யார்? 'கிளார்க்கு' தொழிலுக்கு மனுப்போட்டாலும் அந்த 'எம்ப்ளாய மெண்ட்' ஆபிஸில் எத்தனையோ ஆயிரக்கணக்கான மனுக்களுக்கு இடையில் இது எப்பொழுது அவர்கள் கவனத்துக்குச் செல்லுமோ? தனக்கு 'கிளார்க்கு' வேலை கிடைத்தாலும், இந்த பட்டண வாழ்க்கையில் பாதிச் சம்பளத்தை அழகு செய்யும் ஆடையும் அமைந்திருக்க உதவும் அறையும் விழுங்கி விடும். எஞ்சிய அரைச் சம்பளத்தைக் தன் வயிறு விழுங்கி விடும். இந்த நாசுக்கான தொழிலால் நம்பியவரைக் காப்பாற்றுவது எப்படி?

செல்வ நம்பியின் படிப்பும் சூழ்நிலையும் தற்காப்புக்கே போதிய ஊதியம் தாராத நிலையிலிருக்க அவன் சாரில் ஓடும் வாழ்க்கை

நடத்தக்கனுக் காணவும் முடியுமா? அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தான். அந்தி நேரமும் நெருங்கிக் கொண்டிருந்தது. செல்வ நம்பி அந்த ஊரில் சிலரிடம் உதவி வேண்டினுன்; பயன் இல்லை. முடிவில் அந்த வள நகரத்தின் பெரிய செல்வந்தர் பங்களாவைத் தேடிக்கொண்டு சென்ருன். பங்களாவின் வாயிற் படிக்குள் பயந்து பயந்து நுழைந்தான். உள்ளே சென்ருன். பங்களாவிற்குள்ளிருந்து கம்பீரமான வடிவத்துடன் வருகிருர் ஒருவர். அவர் தான் மருத முத்துப்பிள்ளை என்பவர். பணத்தை நட்டுப் பயிர் செய்பவர் அவர். ஒரு அணுவைக் கூட உயிர் போல நினைத்துச் சம்பாதிப்பவர். விளம்பர தருமத்துக்குக் கொடுப்பதைத் தவிர உண்மையான தருமத்திற்கு என்று கொடுத்தறியாத கை. மருதமுத்துப்பிள்ளை என்ருல் அந்த ஊரில் உள்ள எல்லோருக்கும் அச்சம். அன்புடைமை இருந்தால் அவரைக்கண்டு அஞ்ச வேண்டியதில்லை. அவர் முகத்திலும் எப்பொழுதும் இன்பக் குறியை காணமுடியாது. வலையிழுக்கும் செம்படவன் கண்கள் எப்படி வலைப்பகுதிகளைப் பார்க்குமோ, அப்படித் தான் அவர் பார்வையும் இருக்கும். பணம் எல்லாம் அவர் கண்களுக்குமுளைக்கக்கூடிய விதைகளாகவே தெரியும். அவரைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானுல் ஒரு மூட்டைப் பூச்சி என்று சொல்லலாம்.

மூட்டைப் பூச்சி மக்கள் தூங்கும் பொழுது வேகமாக வந்து தூங்கிக்கொண்டு இருப்பவர்களின் ரத்தத்தை வேண்டிய மட்டும் குடிக்கும். உடனே தன் இருப்பிடத்தில் சென்று பதுங்கிக் கொள்ளும் இந்த உலகத்திலும் கூட எத்தனையோ மனித மூட்டைப் பூச்சிகள் உள்ளன. ஏமாந்த ஏழையின் உழைப்பின் காரணமாக வந்த வியர்வைத் துளிக்காக சுண்டிய ரத்தத்தைக் ''காசாக மாற்றி இரும்புப் பெட்டிக்குள் புதைத்து மாடிக்குள் பதுக்கி வைக்கின்றன. இந்த மூட்டைப் பூச்சிகளில் இதுவும் ஒன்று. அவரைத் தான் செல்வநம்பி பார்த்துக் கும்பிடு போடுகிருன். இதைப் பார்த்த மருத முத்துப்பிள்ளை 'யாரடா அது, காம்பவுண்ட்டுக்குள்ளே தைரியாக வந்துட்டான் என்று கேட்டுக் கொண்டே ''யாரப்பா நீ?'' என்ருர்.

'நான் ஒரு ஏழை' என்ருன் செல்வ நம்பி.

'சரி நான் ஒரு பணக்காரனுண்ணு சொல்லணுமா? வந்த வேலையைச் சொல்லப்பா' என்ருர் மருத முத்துப்பிள்ளை.

'S. S. L. C. வரையில் படித்திருக்கிறேன். காலேஜியில் படிக்க விரும்புகிறேன்; உதவி செய்து படிக்க வைக்கணுங்க' என்ருன்.

'என்னப்பா! என்னுண்ணு நெனச்சு வந்த? எங்கெங்கேயோ பிறக்கிற பிள்ளைங்கெல்லாம் இங்கே படிக்க வைக்கணும்னு வந்தா இது என்ன சொந்தவீடா! போய் ஏதாவது வேலை பார்த்துப்பிழை, போ தம்பி' என்ருர்.

'ஐயா! தயவு செய்து எனக்குக் கொஞ்சம் பண உதவி செய்யுங்கள்' என்ருன்.

'தம்பி! ஒண்ணும் பேசாதே போய் ஏதாவது கவனி. உன்னேடு பேச நேரமில்லை' என்ருர் மருமமுத்துப் பிள்ளை. 'ஐயா, ஊருக்குப் பெரிய செல்வந்தர் என்று வந்தேன் விரட்டாமல் ஆதரியுங்கள்' என்ருன் செல்வ நம்பி.

மருத முத்துப்பிள்ளைக்குக் கோபம் வந்துவிட்டது, 'ஊருக்குப் பெரிய செல்வந்தர். உதவி செய்யும் வழக்கம் இல்லை! போய் விடு, உம்' என்ருர்.

செல்வ நம்பி, இதுவரை எந்தச் செல்வரிடத்தும் பேசி அறியாதவன். இளமை வேகம். 'ஐயா! ஏழைகளையும் உயர்த்தித் தாமும் வாழும் செல்வந்தர்கள் தாம் இந்த உலகில் புகழோடு வாழ்வார்கள்' என்று துடிதுடித்த நிலையில் சொல்லி, மீண்டும் பேச ஏதோ வாய் எடுத்தான்.

மருத முத்துப் பிள்ளைக்கு மிகுதியாகக் கோபம்வந்து விட்டது. 'டேய்! என்னடா சொன்னே, பிச்சைக்கார கழுதை' என்று சொல்லிக் கன்னத்தில் ஒரு அறைஅறைந்து விட்டுத் ஆண்டவனை வணங்க ஆலயம் போனுர். அனுல் அடிபட்டுக் கொண்ட செல்வநம்பி கன்னத்தில் கைவைத்துக் கொண்டு அப்படியே நின்ருன். மருதமுத்துப் பிள்ளையின் கார் போய் விடடது.

இதுவரையில் நேர்மை நேர்மை என்று எண்ணி எண்ணி வாழ்ந்த அவன் உள்ளத்தில் ஒரு கோடு இழுத்து விட்டான்; நேர்மையாக வர்ழ்வதுஎன்பது ஒருகாலும்முடியாது.

வாழ்க்கையில் உயர்ந்து உபதேசம் பேசும் பலர், முதலில் நேர்மையாக உயர்ந்தார்களா? இல்லை. நேர்மையினின்றும் விலகி, பல ஏழைகளின் அடிவயிற்றை-மிதித்து - ஒழுக்கங்களைச் சிதைத்து-பஞ்சமா பாதகங்களைப் புரவச்செய்து அதன் மூலம் உயர்ந்தவர் எத்தனைபேர்! இவர்களெல்லாம் செல்வச் சிறப்பு பெற்ற பிறகு அடியார்களுள் ஒருவராகச் சேர்ந்து-விடுகிறார்கள். உலகமே! உன் வயிறு நாற்றம் வீசுகிறது. இத்தகைய ஏமாற்றுக் குழந்தைகளையும் ஏன் பெற்றிருக்கிறாய்? இது உன் திருவிளையாடலா? இப்படித்தான் இந்த உலக இயல்பு என்றால் நானும் கூட ஒரு ஏமாற்றுக் காரனாகிறேன். ஆனால், ஏழைகளிடத்தில் கௌரவக் கொள்ளையடித்துவரும் அளவிற்கு என் உள்ளத்தை இறுகச் செய்வது கடினம் தான்; ஏழைகளை ஏமாற்றமாட்டேன். எழிலான வாழ்வு உடையவர்களை ஏமாற்றுகிறேன். களவுக் கலையையும்கற்றுக் கொள்ளுகிறேன். கொடியவன் என்ற பெயர் வந்தாலும் வரட்டும். அது வறியவனுக்கு உரிய சொந்தப்பட்டம் ஆயிற்றே! உலகிற்கு அச்சாணி தேரிலிருந்து கழன்று விழுந்து விடட்டும். எண்ணெய் இல்லாத—பழுது பார்க்காத அச்சாணி பிளந்து விழுகிறது' என்றெல்லாம் வாய் பிதற்றினான்.

அழகிய கார் ஒன்று செல்வதைப் பார்த்துப் பின் தொடர்ந்து சென்றான்.

கார் சிறிது தூரம் சென்றதும் ஒருமாடி வீட்டின் முன் நின்றது. அதிலிருந்து ஒருவர் கீழ் இறங்கினார்; வீட்டினுள் நுழைந்தார்.

அந்தக் காரின் பக்கத்தில் தான் செல்வநம்பியும் செல்லுகிறான். காரைப் பார்த்துக் கொண்டே சென்ற அவன் 'மட்கார்ட்' அளவு தூரம் செல்வதற்குள் 'ஸ்டன் பிரேக்' போட்டது போல் நின்றான்- சுற்றுமுற்றும்பார்த்தான். அண்மையில் ஆட்கள் இல்லை. அவன் அவ்வாறு நினைத்ததற்குக் காரணம்- அக்காரில் ஒரு சாவிக் கொத்தைக் கண்டதேயாகும். 'டிரைவர்' 'சீட்'டுக்கு எதிரிலுள்ள பாதுகாப்புப் பெட்டியில் சாவிக் கொத்து அப்படியே இருந்தது. திடீரென்று காரின் கதவைத்திறந்து காருக்குள் நுழைந்தான். அச்சாவியை வலது புறம் சுற்றினான். அதில் பத்து ரூபாய் பணம் தான் இருந்தது. பணத்தை எடுத்துக் கொண்டான். அச்சாவிக் கொலுசையும் எடுத்துக் கொண்டான்: காரின் பின்பகுதியிலிருந்த 'லக்கேஜ் பூட்-ஐத் திறந்தான். அதில் ஒரு பை இருந்தது. அது சிறிது பாரமாகவே இருந்தது- என்ன இருக்கிறது? என்றுகூடப்பார்க்க வில்லை. பையைக் கையில் எடுத்துக் கொண்டான்; சாவிக் கொத்தை லக்கேஜ் பூட்டுக் குள்ளேயே போட்டு அதை மூடிவிட்டான். வேகமாக அடி எடுத்து வைத்தான். சிறு சந்தின் வழியாக நுழைந்தான். அவ்வளவுதான்! எத்தனையோ சந்துகளுக்குள் நுழைந்து விட்டான்,

காருக்குச் சொந்தக் காரர் கார் ஓட்டத் தெரிந்தவர்; வேகமாக வந்து மகிழ்ச்சியுடன் உட்கார்ந்தார்; காரை ஓட்ட முற்பட்டார்; ஓட்ட முடியவில்லை. எதிரில் வைத்திருந்த சாவிக் கொலுசைக்காணவில்லை. கீழ் எல்லாம் பார்த்தார்; அங்கும் இல்லை, காரின்பின் பெட்டியைத் திறந்தார். சாவி இல்லாமலே அது திறந்து கொண்டது. உள்ளே பார்த்ததும் சாவிக் கொத்து தான் இருந்தது, காணாமல் போன பொருளைப்பற்றி எண்ணினார்; கவலை கொள்ளவில்லை. காரை ஓட்டிக் கொண்டு புறப்பட்டார்.

செல்வநம்பி 'ஏழைகளை ஏமாற்ற மாட்டேன்; ஏழைகளை ஏமாற்றி வாழ்பவர் பொருளைத் திருடுவேன்' என்று எண்ணித்தான் இச் செயலில் துணிந்தான். 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய்' என்பது போல வறுமையிலுள்ள அவனுக்கு கார் வைத்திருப்பவர்கள் எல்லாம் ஏமாற்றிப் பிழைப்பவர்களாகவே தோன்றினர்.

இக்காருக்குச் சொந்தமானவர் ஏழையும் அல்ல; ஏமாற்றிப் பிழைப்பவரும் அல்ல யார் என்பது பின்னர் தெரியவரும். செல்வநம்பி செல்வம் சேர்ப்பதில் சிந்தை செலுத்தலானான். அவன் சிந்தை இவ்வாறு தவறான துறையில் செல்லுவதற்குக் காரணம் அவனா? சமுதாயச் சீரழிவா?

செல்வ நம்பி சந்துகளெல்லாம் தாண்டிக் கொண்டு ஊரின் வெளிப்புறப் பகுதியில் சென்றான். வானம் இருளடைந்து விட்டது. முனிசிபல் விளக்குகளும் ஒளி விடத் தொடங்கின. ஒரு விளக்கின் முன் பையைத் திறந்தான். அதிலே பணமும் இல்லை. பலகாரமும் இல்லை; அழகிய உடைகள் இருந்தன. காரில் வந்தவர் வெளியூர்க் காரர். கை இருப்பாக இரண்டு 'செட்'உடைகள் கொண்டு வந்திருந்தார். 'ஷூ' வின் தனிப்பையுங் கூட அப்பைக்குள்ளேயே

இருந்தது. இதைக் கண்ட செல்வநம்பியின் முகத்தில் ஒரே மகிச்சிதான், 'ஆனாலும் இதை அணிந்துகொண்ட பிறகு சொந்தக்காரர் பார்த்துவிட்டால் அவமானப்படுத்திவிடுவாரே' என்று எண்ணினான். மீண்டும் 'சாகத்துணிபவனுக்குச் சமுத்திரம் மூன்று மைல் ஆழம் இருந்தால் என்ன? முழந்தாள் ஆழம் இருந்தால் என்ன? திருடத் துணிந்த எனக்கு மானம் அதிகமாகப் போனாலென்ன கொஞ்சமாகப் போனாலென்ன? நடப்பதுநடக்கட்டும். தப்பித்துக்கொண்டு வாழ்கின்ற வரையில் ஜெயம் தான்' என்று தேற்றிக் கொண்டான்.

அந்த ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டான். கட்டிய வேட்டியையும், கம்பளியையும் அழகிய பையில் போட்டுக் கொண்டான். கையில் 10 ரூபாய் இருக்கிறது. முடி திருத்தும் நிலையத்திற்குச் சென்று தலையை அழகு படுத்திக் கொண்டான். கையில் பையுடன் புறப்பட்டு விட்டான். அவனைப் போலத்தான் அந்தப் பையும் உள்ளது. அவன் அணிந்துள்ள சலவைசெய்த அழகிய ஆடை அவனை வறியவன் என்றுகாட்டாது. அந்தப் பையுங் கூட அதற்குள் இருப்பது கிழிந்த கம்பளி என்பதை உணர்த்தாது. புறஉலகில் வண்ணான் சலவைக்குள்ள மதிப்பு, பொன் மொழி வெளியிடும் புலவனுக்கும் கிடையாது! அழகான உடையணிந்த செல்வ நம்பி நேராக ஒரு ஓட்டலுக்குள் நுழைந்தான்.

(தொடரும்)

மொழிபெயர்ப்புக் கருவி

வேற்று மொழியில் உள்ளவற்றை விரைவில் மொழி பெயர்ப்பதற்கு ஏற்ற மின்னணுக் கருவி ஒன்றை மாஸச்சூஸெட்ஸ் தொழில் நுட்பக் கல்லூரி விஞ்ஞானிகள் அபிவிருத்தி செய்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் ஆராய்ச்சி முற்றுப்பெற்று, 1962-க்குள் உற்பத்திக்குரிய 'மாடல்' கருவியைச் செய்து முடித்து விடலாம் என எண்ணியுள்ளனர்.

அக்கருவியில் "நினைவுப் பகுதி" என ஒன்றுஇருக்கும் என்றும், அப்பகுதியில் ரஷிய அகராதியிலுள்ளஎல்லாச்சொற்களும் அச்சொற்களுக்கு நேரான ஆங்கிலச் சொற்களும் அடங்கியிருக்கும் என்றும் தெரியவருகிறது.

———

அலுமினியத்தால் மோட்டார் என்ஜின்

அலுமினியத்தால் செய்த மூன்று வி-8 மோட்டார் என்ஜினைச் சோதனை செய்து பார்த்ததாகவும் அச்சோதனை வெற்றியாக முடிந்ததாகவும் ஜெனரல் மோட்டார்ஸ் கார்ப்பரேஷன் என்ஜினியர்கள் அறிவித்துள்ளார்கள். அவை இயங்கும் தன்மையையும் அவற்றின் உறுதியையும் அவர்கள் சோதித்துப் பார்த்தார்கள். அந்த அலுமினிய என்ஜின்கள் கையால் செய்யப்பட்டவை. இவற்றின் பருமனும் விசைத் திறனும் உள்ள என்ஜின்களின் எடைக்கு இந்த அலுமினிய என்ஜின்களின் எடை 30 சதவிகிதம் குறைந்ததாக உள்ளது.

———

சென்னை மாகாண டைப் பவுண்டரி தொழிலாளர் சங்கம்

சென்னை மாகாண டைப் பவுண்டரி தொழிலாளர் சங்க கூட்டம் சமீபத்தில் திரு P. சிவசங்கரன் தலைமையில் நடைபெற்றது தொழிற்சங்கத்தலைவர் திரு. V. சக்கரை செட்டியார் மரணம் குறித்து வருத்தம் தெரிவித்து சங்க காரியதரிசி திரு R. தீனதயாளு கொண்டு வந்த தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது.

பிளாஸ்டிக் ஒலிப்பதிவு

கிராமபோன், துணை ஒலி பெருக்கிகள், இசைத்தட்டுகள், ஸ்டீரியோ டேப்புகள் ஆகியவை அனைத்தையும் பிளாஸ்டிக்கில் தயாரித்து பொதுமக்களுக்குவிற்பனைக்குக் கொண்டுவரப் போவதாக அமெரிக்க ரேடியோ கார்ப்பரேஷன் (ஆர்ஸிஏ) அறிவித்துள்ளது. ஸ்டீரியோ என்பதுபலமைக்ரோபோன்களைக் கொண்டு, ஒலிப்பதிவு செய்யப்படும் ஒரு சாதனமாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒலி பெருக்கிகளைவைத்து இந்த ஒலியை மீண்டும் கேட்கலாம். ஒரு தியேட்டர் அல்லது இசை மண்டபத்தில் இருந்து நேரில்கேட்பது போன்ற தன்மையும் ஆழமும் பதிவு செய்யப்பட்ட ஒலிக்கு இருக்கும்.

* * *

1957-ம் ஆண்டில், இந்தியாவில் சிமிண்ட் உற்பத்தியின் அளவு 56 லட்சம் டன்னாகவிருந்தது. 1956-ம் அது 49 லட்சம் டன்.

சிறு கதை:

தியாகச் சுடர்

[சோ. கருணாநிதி]

ஆக்ஸிலேட்டரை ஆத்திரத்தோடு மெல்லிய தன் பாதங்களால் அழுத்திக்கொண்டு ஹாரனை விடாது அடித்துப் பார்த்தாள் சந்திரா.

சங்கர் அவளுக்கு இடம் கொடுத்த பாட்டைக் காணோம்.

"இடியட்!" என்று அவனைத்திட்டிக்கொண்டு அவனுக்குப் பின்னாலேயே தன்னுடைய காரை ஓட்டிக்கொண்டுபோனாள்.

மைசூரை அடுத்துள்ள பிருந்தாவன் வரை சந்திரா எவ்வளவோ முயன்று பார்த்தும் சங்கருடைய பிளிமத்தை முந்திக்கொண்டு போக முடியவில்லை அவளால்.

பிருந்தாவனில் சங்கர் காரை நிறுத்தியதைப் பார்த்ததும் சந்திராவுக்குப் பகீர் என்றது. இங்கேயும் போட்டிக்கு வந்துவிட்டானா?" என்று மனத்தில் நினைத்துக்கொண்டே தன்னுடைய 'பியட்டை' ஓர் இடத்தில் நிறுத்திவிட்டுஉள்ளே சென்றாள். சங்கரும் அவளைத் தொடர்ந்தான்.

சந்திராவும் அவள் தோழி மஞ்சுளாவும் அந்த அழகிய நீர்த் தொட்டிக்கு அருகே போய் உட்கார்ந்தனர். சங்கரும் அவர்களுக்குச் சற்று தள்ளிப்போய் உட்கார்ந்தான் அவன் அவர்களுக்கு அருகே வந்து உட்கார்ந்ததைப் பார்த்ததும் சந்திரா பற்களைக் கடித்துக்கொண்டு கையைப் பிசைந்தாள். சங்கர் அவளைப் பார்த்தும் பாராதவன் போல் பாவனை செய்துகொண்டிருந்தான்.

மஞ்சுளா எங்கேயோ சுற்றிப் பார்த்துவிட்டுவரப்போவதாகக் கிளம்பினாள். அசோக வனத்தில் இருந்த சீதை மாதிரி உட்கார்ந்திருந்த சந்திரா திடீரென்றுபையைத் திறந்து 'மில்டனின்' கவிதை இன்பத்தில் மூழ்க எண்ணி, புத்தகத்தை எடுத்தாள். அவளுடைய கருத்து அதில் செல்ல முடியாதவாறு சங்கர் குறுக்கிட்டான்.

"உங்களுக்கு மைசூர் தான் சொந்த ஊரா?"

"உங்களைத்தான் கேட்கிறேன்! நீங்கள் மைசூரா?" அவளால் பேசாமல் இருக்க முடியவில்லை. "ஏன் எந்த ஊராய் இருந்தால் என்ன?" என்றாள் துடுக்காக!

"எனக்கொன்றுமில்லை! முதன் முதலில் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொள்ளவேண்டும் என்றால் இப்படித்தான் கேட்க வேண்டும் என்பது ஒரு முறை! அதனால் தான்..."

"கேவல மானமுறை! வருந்துகிறேன்! இனிமேலாவது கொஞ்சம் கண்ணியத்தோடு நடந்து கொள்ளப் பழகுங்கள்."

"சந்திரா! உன் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல் பேசவில்லை நான்! வீணாக ஏன் என்னிடம் மறைக்கிறாய்?"

சந்திரா திடுக்கிட்டு அவனைத் திரும்பிப் பார்த்தாள். ஏதோ ஒரு காந்த சக்தி அவன் கண்களில் பிரதிபலித்தது. அந்த காந்த சக்திக்கு முன்னால் அவள் கண்கள் ஒளி இழந்து காணப்பட்டன. ஏனோ தெரியவில்லை, அவளை அறியாமலே அவள் உதடுகள் மின்னலைப்போன்ற முறுவலைக் காட்டி மூடிக் கொண்டன; அவள் ஏதோ பேச முயன்றாள். அதற்குள் மஞ்சுளா வந்து," 'போகலாமா சந்திரா?" என்றவுடன் சந்திரா ஒன்றும் புரியாதவள் போல் புறப்பட்டாள்.

சங்கர் முணுமுணுத்தான்! அருகில் உள்ள ரோஜாச் செடியைப் பார்த்து! "இதோ பார் ரோஜா! நாளை இதே நேரத்தில் இங்கு வருவேன்; அதுவரைக்கும் நீ வாடாமல் எனக்காகக் காத்திரு!" என்று சொல்லிவிட்டு, அவனும் எழுந்தான். சந்திரா, பொங்கிவந்த முறுவலை வெளிக்காட்டாது உள் அடக்கிய வாறே போய் விட்டாள்.

சந்திரா யார்? எங்கிருக்கிறாள் என்பதை அவன் நன்கு அறிந்திருந்தான். ஆனால் சந்திராவோ, அவனுடைய பெயரை மட்டுந்தான் தெரிந்து வைத்திருந்தாளே தவிர, வேறு ஒன்றும் அவனைப் பற்றி அவளுக்குத் தெரியாது.

அந்தக் காருக்குச் சொந்தமானவன் அவன் என்றுதான எண்ணி இருந்தாள். பாவம்! அவளுக்கு என்ன தெரியும் அவனைப் பற்றி?

நாட்கள் ஓட ஓட சந்திராவுக்கு, சங்கரின் பேச்சிலே

மட்டும்தான் உயிர் இருப்பதாக எண்ணினாள். அவன் காட்டும் ஒளி பொருந்திய கண்களிலேதான் தன் வாழ்வின் ஒளி இருப்பதாக உணர்ந்தாள். எனவே தன் உள்ளத்தையும் அவனுக்கே ஒப்படைத்துவிட்டாள். ஆனால் அவனைப்பற்றிய விவரங்களை அவள் தெரிந்துகொள்ள எவ்வளவோ முயன்றாள்! சங்கர் ஒரு சொட்டுக் கண்ணீரை மட்டும் பதிலாகக் கொடுத்துவிட்டுப் பேசாமல் இருந்துவிடுவான்.

அன்றொருநாள் அவள் கட்டாயப்படுத்தியே கேட்டாள்! "சங்கர், உங்களைப் பற்றி இப்படி எத்தனை நாட்களுக்குத்தான் என்னிடம் சொல்லாமல் ஏமாற்றப்போகிறீர்கள்?"

"இல்லை சந்திரா! உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப்போகிறேன்? ஆனால் கேட்டுவிட்டு உன்னையோ அல்லது என்னையோ ஏமாற்றிவிடாதே!

மடிப்புக் குலையாத 'பாண்ட்'டும் ஷர்ட்டும் போட்டிருப்பதாலும், அடிக்கடி நான் காரில் சுற்றுவதாலும் என்னைப் பற்றி நீ தவறாக எண்ணி இருந்தால் தயவு செய்து அதை மாற்றிக் கொள்! அவற்றிற்கெல்லாம் சொந்தக்காரன் நான் அல்ல! உண்மையைச் சொல்லப்போனால் நான் ஒரு கூலிக்காரன்.

"உண்மையாகவா சங்கர்?

"ஆமாம்! என்றோ என் வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கிவிட்டேன். வாழவேண்டும் என்ற ஆசையையேவிட்டேன்! அந்த நேரத்தில்தான் நீகுறுக்கிட்டாய்! பட்டுப்போன என் வாழ்க்கை மரத்தைத் துளிர்விடச் செய்த பெருமை உன்னைத்தான் சேரும். வாழவேண்டும் என்ற ஆவல் இனிமேல் என் உள்ளத்தில் இருக்குமானால் அங்கே நீயும் குடி இருக்க வேண்டும்! இல்லையானால் மீண்டும் பட்டதுதான்......" கண்ணீர் அவன் விழிகளில் தேங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அவன் அந்த வெளிக்காட்டவில்லை.

"அப்படி என்ன வந்துவிட்டது உங்களுக்கு?" என்றாள் சந்திரா!

"மங்களூரில் எங்கள்மூன்று உயிர்களையும் தவிக்கவிட்டுப் போய் விட்டார் என் தந்தை. குடும்பப் பொறுப்பு என் தலையில் விழுந்தது; தந்தையை இழந்து தவிக்கும் என் தங்கை சங்கரியை ஒரு குறையும் இல்லாமல் காப்பாற்ற எவ்வளவோ பாடுபட்டேன்; இன்பப்பூங்காவில் என் தங்கை புதுமைத் தென்றலுடன் ஆடி ஒடி விளையாட வேண்டும் என்று துடியாய்த் துடித்தேன. ஆனால் எங்கள் குடும்பத்தையே சுற்றி வளைத்துக் கொண்டிருந்த வறுமைப் பேய் என் தங்கைக்கு நல்ல கணவன் கிடைக்க முடியாமல் செய்துவிட்டது.

"ஆசிரியர் ஒருவர் கடைசியில் என் தங்கையின் கரம் பற்றினர். 'மகளுக்கு மணமாகிவிட்டது இனி நமக்குக் கவலை இல்லை' என்று எண்ணியோ என்னவோ என் தயாரும் தந்தையைப் பின்பற்றிச் சென்று விட்டார்! நான் யாருமற்ற அனாதையானேன். இருந்தாலும் தங்கையை நல்ல இடத்தில் சேர்த்து விட்டோம் என்ற இறுமாப்பால் எவ்வளவோ மகிழ்ந்திருந்தேன். அந்த மகிழ்ச்சியை மண்ணோடு மண்ணாக்கி விட்டு வந்தது ஒருதந்தி ஆமாம்! தங்கை திடீரென்று இறந்து விட்டதாக! என் இதயத்தைப்பிளந்து சுடு நெருப்பை அள்ளிக்கொட்டினால் எப்படி இருக்கும்? அடக்க முடியாத வேதனை; இனிமேல் நான் யாருக்காக வாழவேண்டும்? என் உயிரே என்னை விட்டுப் பிரிந்த பிறகு எனக்கேன் வாழ்வு?" இப்படியெல்லாம் எண்ணியது இதயம்! சிறிதுமே பற்று இல்லாமல் நடைப் பிணம் போல் கால் போன போக்கில் நடந்து திரிந்தேன். ஏன் சுற்றினேன் என்று மட்டும் கேட்காதே! அது எனக்கே தெரியாது! அப்படிச் சுற்றித் திரிவதிலே தான் நான் சிறிதளவாவது மகிழ்ச்சி அடைந்தேன். கடைசியாக மைசூர் வந்தேன்.

"டிரைவர் வேலையை வலுக் கட்டாயமாய் கொடுத்தார்கள். அந்த வேலை சம்பாதித்துக் கொடுத்த மதிக்க முடியாத மாணிக்கம்தான நீ! இதுதான் சந்திரா என் வாழ்வுப் பட்டியல். பிரித்துக் காண்பித்து விட்டேன். இனி சிந்திக்க வேண்டியதுஉன் பொறுப்பு" என்று முடித்தான்.

சந்திரா, தன் கண்களில் துளித்த நீரை துடைத்துக் கொண்டே சொன்னாள், "சங்கர்! உங்களை உங்கள் அந்தஸ்தில் மயங்கி விரும்பவில்லை. எனக்கு உங்கள் உள்ளந்தான் பெரிது! சங்கர் என்றும் என் சங்கர் தான்" என்றாள்.

"போதும் சந்திரா போதும்! இனியும் நீ பேசாதே பேசினால் என் இதயம் மகிழ்ச்சியால் நின்றே போய் விடும்!" என்று அவன் சொல்லும் போதே அவன் கண்களில் நீர் வழிந்தோடியது.

ஒரு மாதம் ஓடி இருக்கும்! ஒரு வாரமாக சங்கரை காணுததால் வேதனையோடு இருந்த சந்திராவிடம் மஞ்சுளா ஓடி வந்து பத்திரிகையை நீட்டினுள்.

“சங்கர் என்ற வாலிபன் பன்னிரண்டு வயது இளம் பெண்ணின் மேல் காரை ஏற்றிக்கொன்றுவிட்டதால் அவனுடைய கவனக் குறைவிற்காக இரண்டு ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

என்ற செய்தியை அவள் படித்ததும் “ஓ” வென்று அலறி விட்டாள்! “சங்கர்! உங்களுக்குமா இந்தக் கதி வரவேண்டும்!” என்று அலறினுள். யார் அவளைத் தேற்றுவது?

முன்னமே செய்திருந்த ஏற்பாட்டின்படி அவளுடைய திருமண ஏற்பாட்டைச் செய்து விட்டார், அவளுடைய தந்தை! சந்திரா கதறினுள்! கண்ணீர் வடித்தாள்; திருமணம் வேண்டாம் என்று! ஆனுல் நடந்தது வேருகப்போய் விட்டது! ஆம்! நல்ல நாள் ஒன்றில் சந்திராவுக்கும் பிரபல கம்பெனி ஒன்றின் சொந்தக்காரரான மோகனுக்கும் திருமணம் நடந்தது. சந்திரா கண்ணீரும் கம்பலையுமாக அவன் கைப் பிடித்தாள்.

திருமணம் ஆகி ஒருவாரம் சென்று ஒருநாள் மோகன் சந்திராவை அழைத்து, “உனக்கு சங்கரைத் தெரியுமா?” என்று கேட்டான்.

சந்திரா திடுக்கிட்டாள்! “என்ன கேட்கிறீர்கள்?” நா தழதழக்கக் கேட்டாள் மோகனைப் பார்த்து.” அட, பைத்தியமே! ஏன் இப்படி நடுங்குகிருய்? அவன் யார் தெரியுமா? நீ நினைக்கிறபடி அவன் குற்றவாளி அல்ல! என் உயிர் நண்பன்! எனக்கு வாழ்வையும் மானத்தையும் கொடுத்தவன்.........!”

“என்ன சொல்கிறீர்கள்?”

“ஆம்சந்திரா! நான் கார் ஏற்றிக்கொன்ற குற்றத்தை அவன் ஏற்றுக்கொண்டான். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்! அவன் கேட்கவில்லை!”

“நீங்கள் செய்த குற்றத்திற்கு அவர் ஏன் பழியாக வேண்டும்?” என்று உள்ளத்தில் கிளர்ந்தெழும் வேதனை உணர்ச்சியைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு கேட்டாள். “எனக்கு உன்னைப் பேசி இருக்கிருர்கள் என்பதை அவன் எப்படியோ தெரிந்து கொண்டான். அவன் எனக்காக தான் குற்றவாளி என்று ஏற்றுக்கொள்ளும் போது, ஸார்! நீங்கள் வாழவேண்டியவர்கள்! மேலும் கல்யாணம் வேறு நிச்சயம் செய்திருக்கிருர்கள். இந்நிலையில் நீங்கள் இந்தக் கதிக்கு ஆளாக வேண்டும். நானே அந்தக் குற்றத்தை ஏற்றுக்கொள்கிறேன்! நான் யாருமற்றவன். ஆனுல் நீங்கள்......! வேண்டாம்! நீங்களும் உங்களை வாழ வைக்க வரும் சந்திரா அம்மாளும் நீடூழி வாழ வேண்டும்! இது தான் என் வேண்டுகோள்!” என்று சொல்லிப்போனுன்; அவன் நமது வீட்டு டிரைவர் தான்! இருந்தாலும் அந்தத் தியாகச் சுடர் தான் இன்று நம் வாழ்வுக்கு விளக்கேற்றி வைத்திருக்கிறது!” என்று கூறி முடித்தான் மோகன்!

சந்திரா எதுவுமே பேச முடியாமல் கண்ணீர் வடித்தாள்! அந்தக் கண்ணீரின் கதை மோகனுக்கு தெரிந்திருக்காது; தெரியவும் வேண்டாம்.

சிவாஜி கணேசனுக்கு மதுரை மக்கள் பாராட்டு

———

மதுரை சௌராஷ்ட்ரா உயர்நிலைப் பள்ளியில் மதுரை நகரசபைத் தலைவர் திரு. ஏ. ஜி. சுப்பராமன் தலைமையில் திரு சிவாஜி கணேசனுக்கு வரவேற்பு விழா நிகழ்ந்தது. தமக்கு அளித்த வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் திரு சிவாஜி கணேசன் அவர்கள், “கட்டபொம்மன் நாடகம் நடத்த வந்த எனக்கு இதுபோன்ற வரவேற்புக் கிடைக்கும் என்றே எதிர்பார்க்கவில்லை. “தென் இந்திய நடிகர்கள் சங்கமும் மற்றுமுள்ள எல்லாக் கலைஞர்களும் ஒற்றுமையை வளர்க்கவும், ஒருமித்து வாழவுமே பெரும்பணி ஆற்றி வருகிருர்கள். நடிகர்களில் யார் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற எண்ணத்திற்கே இடமளிக்கக் கூடாது. கலை வளர வேண்டும் என்பதற்காகவே கலைஞர்கள் பாடுபடுகிருர்கள்” என்று தன் உரையில் குறிப்பிட்டார். சட்டசபை உறுப்பினர் திரு. ஏ. வி. சங்கரன், சக்தி கிருஷ்ணசாமி, நெல்லை நகரசபைத் தலைவர் திரு. ப. இராமசாமி ஆகியோர் திரு சிவாஜி கணேசனின் சேவையைப் புகழ்ந்தனர். திரு. சோலைமலை மற்றும் திரைப்படப் பிரமுகர்களிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன.

வாணிபக் கொள்கை

[சுப. அருளாளன்]

பொருளியல் நூற்பேரறிஞர்கள் ஒருவகைத் தடையில்லா வாணிபத்தை ஆதரித்து முன்பெல்லாம் எழுதி வந்தனர். கட்டுப்படுத்தப்பட்ட வாணிபத்தை அவர்கள் அவ்வளவாகப் பாராட்டவில்லை. பொதுவாகவே ஒரு நாட்டில் இறக்குமதி வாணிபம் பெருமளவில் ஊக்குவிக்கப்படுவதில்லை. அனைத்துலக வாணிபத்தில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுவதன் மூலம், உலகெங்கினும் கிடைக்கும் வளங்களை நன் முறையிற் பகிர்ந்து நிலைப்படுத்தலும் அவற்றினின்று அதிக அளவு பயன்களைப் பெறுதலும் கூடும். கட்டுப்படுத்தப்படாத அனைத்துலகப் போட்டியின் கீழ், ஒவ்வொரு நாடும் தன்னுடைய மூலதனம், உழைப்பு முதலியவற்றை உற்பத்தியில் ஈடுபடுத்தி, இயற்கையான அதிகப்பட்ச நன்மையையோ அன்றி குறைந்த அளவு நன்மையின்மையையோ அடைகிறது. தன்னுடைய இயற்கை வளங்களை முழு அளவில் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடும் நாடு, தன் வருவாயைப் பெருமளவில் பெருக்கிக் கொள்கிறது இரண்டாவதாகத் தடையில்லா வாணிபக் கொள்கை நாட்டு மக்களின் சராசரி வருமானத்தையும் அதிகப்படுத்தும் என்று கூறப்படுகிறது. நுகர்வோருக்கும் இக்கொள்கை நன்மை பயப்பதாகும். இக்கொள்கை உள்நாட்டில் உற்பத்தியாளர்களின் ஏகபோக வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி, உற்பத்தியில் போட்டிச் சக்திகளை உயிருடன் இயங்கவிடுகிறதல்லவா?

ஆனால், தடையில்லா வாணிபம், ஒரு நாட்டின் இயற்கையான பொருளியல் வளங்களை மிகுதிப்படுத்தவேண்டும் எனும் கட்டாயமில்லை. ஒரு நாடு பிறிதொரு நாட்டை விட முன்னிற்கிறது எனில் அதற்கு அந்த நாடு பெறும் வேறு பல சலுகைகளும் காரணமாயிருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒரு பொருளை முதலில் உற்பத்தி செய்த நாடு அதிக நன்மைகளை அடையலாமல்லவா? இந்த நிலையில் “தொழிற்பாதுகாப்பு” அல்லது “வாணிபப் பாதுகாப்பு” என்பதன் இன்றியமையாமை எழுகிறது. உற்பத்தி சக்தியின் வளர்ச்சி, செல்வத்தினைக் குவித்தலைக் காட்டிலும் முக்கியமானது. இரண்டாவது, பொருளாதாரக் காரணங்களுக்காகத் தடையில்லா வாணிபத்தை ஆதரித்தாலும் ஒரு நாட்டின் தேசிய நலன் என்று பார்க்கையில் அதை நாம் ஆதரிக்க முடியாது. ஆடம் ஸ்மித் கருத்துப்படி செல்வப் பெருக்கத்தை விடச் செல்வத்தினைக் காத்தல் சிறந்ததாகும். ராணுவத்துறையில் தன்னிறைவு பெற வேண்டியதற்காக ஒரு நாடு, படைக்கலங்களை உற்பத்தி செய்யும் தொழிலைத் தொடங்கத்தான் வேண்டும். மூன்றாவது, உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்போரை விட கைத்தொழில்களில் ஈடுபட்டிருப்போர் விரைவும் முன்னேற்றமும் கொண்டு சிறப்பதாகத் தெரிகிறது. பயிர்த் தொழிலுக்கான வளங்கள் நிறையவுடைய நாடு, அதில் அதிகக் கவனம் செலுத்துதல் நன்மை தரும். எனினும் தேசிய நலன் கருதி, கைத்தொழில்களையும் வளர்த்துத் தானாக வேண்டும்.

அதிகக் கூலி தரும் நாட்டில் வாழ்க்கைத்தரத்தினை நிலையானதாக்க “தொழிற் பாதுகாப்பு” தேவை என்கின்றனர். உற்பத்திச் செலவு அதிகமாகுமானால் தொழிலாளர்களுக்கு அதிகக்கூலி கிடைக்கும்; அதிகக் கூலி தொழிலாளர்களுக்குக் கிடைத்தால் வாழ்க்கைத் தரம் உயரும். குறைந்த உற்பத்திச் செலவுடைய நாடுகள், இன்னொரு நாட்டின் தடையில்லா வாணிபக்கொள்கையைப் பயன் படுத்திக் கொண்டு, தன் உற்பத்திப் பொருள்களை அந்த நாட்டில் குவித்தால் அதிக உற்பத்திச் செலவுடைய அந்த நாட்டின் தேசியத் தொழில்கள் நசித்துப்போதல் இயல்பே. எனவே வாழ்க்கைத் தரத்தினைப் பாதுகாக்க, “பாதுகாப்பு” அவ

சியந்தான். ஆனால் இது முற்றிலும் சரியான முடிவுமல்ல. அதிக அளவு மனித உழைப்பினை உற்பத்தியில் ஈடுபடுத்துவதன் மூலம் தன் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை ஒரு நாடு மேம்பாடடையச்செய்தலுங் கூடும். மனித உழைப்புகூடுதலாயிருந்தால் உற்பத்திச் செலவு குறைவாதலுங் கூடும். உற்பத்திச் செலவு குறைவதால் வாழ்க்கைத் தரம் உயர்தலும் சாத்தியமே. தொழிலாளர்களின் கூடுதலான திறமை நன்முறையில் ஈடுபடுத்தப்படும் உழைப்பின் கூடுதலளவு, வளமிக்க இயற்கைச் செல்வங்கள் முதலியன பல்வேறுநாடுகளின் வாழ்க்கைத்தர வேறுபாடுகளை நிர்ணயிக்கக் கூடும்.

இந்தக் கூற்றை உண்மையெனக் கொண்டால், "பாதுகாப்பு" என்பதுஉள்நாட்டில் தரக்குறைவான உற்பத்திக்குக் காரணமாகலாம். அப்பொழுது நாட்டுச் செல்வமும் குறையும். இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகளைக் கூட்டுவதன் மூலம் உண்மையான தேசிய வருமானத்தையும் இந்தப் பாதுகாப்புக்கொள்கை குறைத்துவிடும்.

கட்டுப்படுத்தப்பட்ட வாணிபம் வேலையின்மையைப் போக்கிவிடும் என்கின்றனர் சிலர். "உள்நாட்டுப் பொருள்களையே வாங்குக" எனும் முழக்கம் இதனின்று தான் எழுந்தது. இது எவ்வளவு தூரம் உண்மை எனப் பார்க்கலாம். குறிப்பிட்ட சில தொழில்களுக்குத் தரப்படும் பாதுகாப்பு, அந்தக் குறிப்பிட்ட தொழில்களில் தான் வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்தும். அதிகத் தொழிலாளர் அவற்றில் ஈடுபடுத்தப்பட்டு அவர்கள் உழைப்பு பயன்படுத்தப்பட்டால், ஓரளவு வேலையின்மை நீங்கும். ஆனால் "பாதுகாப்பு", வேலை வாய்ப்புகளில் குறிப்பிடத்தக்க கூடுதல் ஏற்படுத்துமா என்பதே கேள்வி. இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக, ஏற்றுமதியிலும் கணிசமான அளவு குறைவு ஏற்பட்டே தீரும். இறக்குமதி கட்டுப்பாடுகளின் மூலம் உள் நாட்டுச் சந்தைக்கான பொருள்களின் உற்பத்தியில் அதிகம் பேருக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படும். அதே சமயத்தில் வெளிநாட்டுமுதலீட்டையும் அதிகப்படுத்த வேண்டும். கூடுதலான வாய்ப்புகளால் ஏற்படும் மூலதன முடக்கம், உள்நாட்டு மூலதன ஊற்றையும் அடைத்துவிடக்கூடும். கூலி உயர்வு, விலையுயர்வு, இவற்றிற் கிடையேயுள்ள காலம் முதலியவற்றைக் கொண்டு ஆராயுமிடத்து, கட்டுப்பாட்டின் விளைவான இறக்குமதிப் பொருள்களின் விலை ஏற்றம், கூலியில் குறைவையும் ஏற்படுத்தும். குறைந்த கூலி காரணமாக அதிகம் பேருக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படலாம்.

இறக்குமதி குறைந்தும், ஏற்றுமதி மிகுந்தும் இருக்குமானால், அது உடனடியான தேசிய வருமானப் பெருக்கத்தில் கொண்டு நிறுத்தும். இறக்குமதியின் அளவைத் திறமையான கட்டுப்பாட்டின் மூலவ் முறையில் குறைத்தால், உள்நாட்டுப்பொருள்களை வாங்கும் விருப்பம்மக்களிடையேமிகுந்து, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் எண்ணம் குறைந்தால் வேலை வாய்ப்புகள் அதிகமாகும். ஏனெனில் நாம் அனுப்பும் பொருள்களுக்குப் பிறநாடுகளும் இதேபோன்ற கட்டுப்பாடுகளை விதிக்காமலிரா என மக்கள் உணர்ந்து விடுவர்.

தேசிய நலன் கருதி விதிக்கப்படும் இறக்குமதிக் கட்டுப்பாடு, வெளிநாட்டுப் போட்டியை ஓரளவு தடுக்கும். ஆனால் கட்டுப்பாடு விதித்த நாட்டின் மக்கள் வெளிநாட்டுப் பொருள்களை வாங்குவதினின்றும் தடுக்க முடியாது. அதற்கு இறக்குமதியாகும் வெளிநாட்டுப் பொருள்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தலாம "பெரும் கட்டுப்பாடு" இருந்த காலத்தில் இம்முறை மிகவும் பழக்கத்திலிருந்தது, இரண்டாம் உலகப் பெரும் போரின் பின்னர் இம்முறை மிகவும் விரும்பிப் பின்பற்றப்படுகிறது. இதை "இறக்குமதிக் கோட்டா" என்கின்றனர். இது ஐவகைப்படும் 1. குறிப்பிட்ட பொருளைக் குறிப்பிட்ட அளவில் இறக்குமதி செய்ய அனுமதித்தல்-கூடுதலான பொருள்கள்தேவைப்பட்டால் சுங்கவரியை அதிகரித்து இறக்குமதிக்கு ஏற்பாடு செய்தல். 2. சம்பந்தப்

பட்ட பிறநாட்டு அரசுகளுடன் முன்கூட்டியே எவ்விதப் பேச்சுவார்த்தையும் வைத்துக்கொள்ளாது குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் குறிப்பிட்ட பொருளை இறக்குமதி செய்ய அனுமதித்தல். 3. இறக்குமதி லைசென்ஸ் வழங்குதல் எனப்படும் முறையில் அனுமதிக்கபட்ட நிறுவனங்களுக்கு மட்டும் பொருள் இறக்குமதி செய்யும் உரிமைவழங்குதல் 4. பிற அரசுகளுடன் பேச்சவார்த்தைகள் நடத்தி உடன்பாட்டிற்கு வந்து அதன் பின் கட்டுப்பாடுகள் விதித்தல். 5. வெளிநாட்டில்தயாராகும் மூலப்பொருளை, செய்து முடிக்கப்பட்ட பொருளுடன் முறையான அளவில் கலந்து கொள்ளும் அனுமதியளித்தல்-

இறக்குமதிகளின் பேரில் அளவை முறைக் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துவது, இறக்குமதித் தடையைக் காட்டிலும்—ஏன்? "பாதுகாப்பு" வழங்குதலைக் காட்டிலும் நல்ல பயன்களைத்தரும். ஏனெனில் "பாதுகாப்புக் கொள்கை"யும் இறக்குமதித்தடையும் அனைத்துலக வாணிபத்தின் பல திறப்பட்ட நிலைகளின் அடிப்படைக்கும் நன்மைகள் தரமாட்டா.

❋

* * *

கைத்தறி ஏற்றுமதி மூலம் இந்தியாவுக்கு 8கோடி ரூபாய் மதிப்புள்ள அன்னியச் செலாவணி கிடைக்கிறது. கைத்தறி ஜவுளிகள் இலங்கை, சிங்கப்பூர். நைஜிரியா (மேற்கு ஆப்பிரிக்கா) ஆகியவிடங்களுக்கு மாமூலாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இலங்கை, சிங்கப்பூர், ஏடன், பாங்காக், ரங்கூன் ஆகியவிடங்களில் சர்க்கார் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. அமெரிக்க நாடுகள், மேற்கு ஜெர்மனி, இதர மேற்கத்திய நாடுகளில் இப்பொழுது கைத்தறித் துணிகளுக்குக் கிராக்கி ஏற்பட்டு வருகிறது.

14485O

MURUGAN STORES

Gangaram Buildings, Ajmal Khan Road, Karol Bagh,

NEW DELHI.

★

Dealing with All South Indian Goods such as Coffee, Raw-Roast & Powder, Rice, Provisions,

HOME DELIVERY UNDERTAKEN.

Our aim is to Satisfy All.

எனக்குப் பிடிப்பதில்லை !

—நீதி—

சோலையினில் காத்திருங்க ளத்தான் அந்தி
சோர்கின்ற நேரத்தில் வருவே னென்ருய்!
மாலையெனும் கொடுங்காலம் நீங்கி வானில்
மலர் கொத்தோ! உன் முகமோ என்றே தோன்றும்
கோல நிலா வந்தும்நீ வந்தா யில்லை
குளிர் சிந்தும் எழில் நிலவே! வறண்டிருக்கும்
பாலைதனில் பூங்காவே! எனக்கு உந்தன்
பசப்பு கின்ற வார்த்தைகள் தாம் பிடிப்பதில்லை!

* * * *

கார் பூத்த திருக்கூந்தல் மண்ணில் வீழ
கண் பூத்துப் போம் வண்ணம் கலையின் முடிவாய்
நீர் சிந்தும் பெருங்குடத்தை இடுப்பில் தூக்கி
நில மகளுக கழகு செய நடந்து வருவாய்!
சீர் பூத்த சிலைக் கொடியே! என்னைப் பார்த்தால்
சிரந்தாழ்த்தி நிலம் நோக்கி ஊர்வாய்,...சீ....சீ....
பார் முழுதும் உனைப்போலக் கண்டதில்லை
பனிமலரே! எனக்கிது தான் பிடிப்பதில்லை!

* * * *

அல்லி மலர் மதிகண்டு அலர்ந்து நிற்றல்
ஆரணங்கே! எதற்காக என்றுனக்கு
நல்லபடி நான் கூறி விளக்கி அஃது
நளிர்மதிமேல் மலர்கொண்ட காதல் என்று
சொல்லியும் நீ சிறிதேனும் புரியாதிங்கே
காதல் எனில் பொருள் கேட்பாய்! எனக்கோ ஈங்கோர்
கல்லினிலே முட்டிக் கொண்(டு) அழத்தான் தோன்றும்
கனி மொழியே! எனக்கிது தான் பிடிப்பதில்லை...

* * * *

கூட்டத்துத் திருவிழவில் தங்கை தன்னை
குறும்புமிகச் செய்கின்ற தம்பிதன்னை
தோட்டத்து மல்லிகையே! காவலாகத்
துணைகொண்டு வருகின்ருய்-அது போகட்டும்
பாட்டியையும் உடனழைத்து வருகின்ருயே,
பயப்படட்டும் இவன் என்ரு எண்ணுகின்ருய்?
வாட்டடங்கண் மலர்க்கொத்தே! தனியாய் வாயேன்!
வாலெதற்கு? எனக்கிதுதான் பிடிப்பதில்லை.

தமிழ் நாடு கொடிக்கால் விவசாயிகள் சம்மேளனத்தின் வேண்டுகோள்

சென்னை ராஜ்யத்தில் வெற்றிலைக்கொடிக்கால் விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வரும் சுமார் 10 லட்சம் விவசாயிகளின் ஜீவாதாரமான பிரச்னைகளைப் பரிசீலனை செய்யவும், அவர்களுக்குத் தக்க பாதுகாப்பளிக்கவும் அடியிற்கண்ட விஷயங்களையும், எங்களது 2வது ராஜ்ய மகாநாட்டின் சகல அம்ச தீர்மானங்களையும் பரிசீலனை செய்யவும், கொடிக்கால் விவசாயிகளின் உண்மை நிலையை அறியவும், நிவாரணமளிப்பதற்கான சிபாரிசுகளைச் செய்யவும், கொடிக்கால் விவசாயிகளின் பிரதிநிதிகள் அடங்கிய விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வெற்றிலைக் கொடிக்கால் பெரும்பாலும் நல்ல வடிகால் உள்ள நஞ்சை நிலங்களிலும் சிலபகுதிகளில் புஞ்சைநிலங்களிலும் சாகுபடி செய்யப்படுகிறது. வெற்றிலை விவசாயம் மூன்று வருஷப் பயிர். வெற்றிலை சாகுபடியானது, முதல் வருஷப் பயிர் "கொளுந்து கொடிக்கால்" என்றும், இரண்டாவது வருஷ பயிர் "பயிர்க்கொடிக்கால்" என்றும், மூன்ருவது வருஷப்பயிர் "முதுகால் கொடிக்கால்" என்றும் அழைக்கப்படும். முதலாவது வருஷத்தில் பலனை எதிர்பாராமல் போதிய பணத்தைச் செலவு செய்து பயிரிடும்விவசாயிகளுக்கு, இரண்டாவது வருஷத்தில் நல்ல மாசூலை அளித்துவிட்டு, மூன்ருவது வருஷத்தில் சொற்ப பலனைக் கொடுத்துவிட்டு ஷை பயிர் அழிந்துவிடும். அதே நிலத்தில் மீண்டும் கொடிக்கால் பயிரிட முடியாது. இரண்டு வருஷங்களுக்கு ஷை நிலம் கொடிக்கால் சாகுபடிக்குத்தகுதியற்றதாக ஆகிறது எனவேமூன்ருவதுவருடத்தியமுதுகால் கொடிக்கால் அழிந்தவுடன், தங்களது தொழிலுக்காக வெற்றிலை சாகுபடியாளர்கள் வேறு புதிய நிலத்தைத் தேட வேண்டும். இதுவரை இருந்துவந்த நடைமுறைப்படி கொடிக்கால் அழிவுத நிலத்தை ஒப்புவித்துவிட்டு, புதிய சாகுபடிக்கு வேறு புதிய நிலத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

புதிய இடைஞ்சல்

சென்னை ராஜ்ய சாகுபடி படியாளர் பாதுகாப்பு மசோதா அமுலுக்கு வந்ததிலிருந்து, (நிலமாற்றம் தடுக்கப்படுவதால்) கொடிக்கால் சாகுபடிக்கு இதுவரை இருந்து வந்த நடைமுறைக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதோடு, வெற்றிலை விவசாயிகளுக்கு புதிய நிலம்கிடைக்க முடியாத சூழ்நிலை உருவாகி இருக்கிறது. கொடிக்கால் விவசாயத்திற்குத் தேவையான புதிய நிலங்களைப் பெற ஷை சட்டத்தில் உரிமை அளிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினல் அடுத்த் வருஷம் சுமார் 2 லட்சம் விவசாயிகளுக்கு நிலம் கிடைக்காமல் போய்விடுமென அஞ்சுகிருேம். ஷை சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து இதுவரை சுமார் 10000 கொடிக்கால் விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கவில்லை. இதே நிலைமை நீடிக்குமானல் லட்சக்கணக்கான கொடிக்கால் விவசாயிகள் வேலை இழப்பதுடன் வெற்றிலைவிவசாயமே அழிந்துவிடும். அதன் மூலமாக இன்று தொழில் செய்யும் கொடிக்கால் விவசாயிகள், வேலை இல்லாத்திண்டாட்டத்திற்குள்ளாகி, பஞ்சம், பட்டினி, பிணிகளை எதிர்நோக்கவேண்டிய பேராபத்து உருவாகி வருகிறது.

கொடிக்கால் விவசாயிகளையும் இதர விவ்சாயிகளுக்குச் சமமாகக் கருதி, நியாயவாரச் சட்டத்தின்படியான, வாரநிர்ணயம் வெற்றிலை சாகுபடியாளர்களுக்குக் கிடைக்குமாறு செய்யவேண்டுமெனவும், கொடிக்கால் பயிருக்குப் பிராந்திய வாரியாகக் குத்தகை நிர்ணயிக்கவும் சட்டத்தில் தகுந்த திருத்தங்கள் செய்ய வேண்டுகிருேம்.

கொடிக்கால் விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் அமைத்து கடன் உதவி அளிக்கப்படுமென மாகாண கூட்டுறவு ரிஜிஸ்டிரார் அவர்கள் அறிவித்த (L. 145056/56-C 2) தாக்கீது எல்லா ஜில்லாக்களிலும் சரியான முறை

யில் அமலாக்கப் படவில்லை என்பதையும், திருநெல்வேலி ஜில்லாவில் வெற்றிலை உற்பத்தியாளருக்கு கூட்டுறவு சங்கங்கள் அமைத்து கடன் வழங்கப்பட்டுள்ள அதே அடிப்படையில் கூட நடவடிக்கை எடுக்க மதுரை ஜில்லாவில். கூட்டுறவு மத்திய பாங்கு மறுத்து வருகிறது என்பதையும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவருவதுடன், இது விஷயத்தை உடனடியாகக் கவனித்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுகின்றோம்.

கொடிக்கால் விவசாயம் மூன்று வருஷப் பயிர் என்பதைக் கவனத்தில்கொண்டு, அவர்களுக்கான கடன் உதவியை 3 வருஷத்தவணையில் கொடுக்கப்படவேண்டுமெனவும், டைகடன் தொகையை வருஷத்திற்கு இரண்டு அல்லது மூன்று தவணைகளில் வசூலித்துக்கொள்ள ஆவன செய்யவேண்டுமெனவும் கேட்டுக் கொள்வதுடன், கொடிக்கால் பயிரை ஜாமீனாகக் கொண்டு கடன் உதவி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

(குறிப்பு: இந்த வேண்டுகோளின் நகல்கள் ராஜ்ய முதல் மந்திரி உள்பட மந்திரிகளுக்கும், சட்ட மன்றங்களின் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.)

●

கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள்

சென்னை நகரிலும், மாவட்டங்களிலும் கௌரவமாஜிஸ்டிரேட்டுகள் நியமான விஷயத்தில் விண்ணப்பங்களைக் கோரும் முறையை அரசாங்கம் நிறுத்திவிட்டது.

நல்ல தகுதியும், போதுமான யோக்யதாம்சங்களும் உடைய நபர்களிடையேயிருந்து பிரதம மாகாண மாஜிஸ்டிரேட்டும், கலெக்டர்களும், கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளைத் தெரிந்தெடுப்பார்கள். விண்ணப்பங்களைக் கோரும் முறை 1956-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அதன் பணி முறையை ஆராய்ந்த பின்பு, அந்த முறையைக் கைவிட அரசாங்கம் முடிவு செய்தது.

MANIYAM INDUSTRIAL & ENGINEERING WORKS,

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. S. 5.)

A. C. C. CEMENT STOCKIST

32, Sankari Road, Trinchengode, (Salem Dt.)

(சென்னை அரசினர் உதவி பெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்பு பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக்கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

கிண்டியில் தொழில் பண்ணை

கிண்டியில் உள்ள கைத் தொழில் பண்ணையில், அதி விசேஷமான யந்திரக் கருவிகளை வாடகைக்கு விடுவதற்கான நிலையம் ஏற்படுத்த அரசாங்கம் அனுமதித்துள்ளது. அந்த நிலையத்தில் விசேஷ வகை யந்திரங்கள் 20 இருக்கும். தொழில் நுட்ப உதவி ஸ்தாபனத்திடமிருந்து இலவசமாகப் பெறப்பட்டவை அவை. கிண்டி கைத் தொழில் பண்ணையில் உள்ள சிறு தொழில்காரர்களுக்கு, அந்த யந்திரங்கள் குறுகிய காலத்துக்கு வாடகைக்கு விடப்படும். இந்த ஏற்பாட்டின் மூலம் தொழிலதிபர்கள் புதிய உற்பத்தித் துறைகளைத் துவக்க வழி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கட்டிடங்கள் கட்டுவது, யந்திரங்களைக் கொண்டுவந்து சேர்த்தல் முதலியன உள்பட இந்தத் திட்டத்துக்கு செலவு ரூ. 3¼ லட்சம் ஆகும்.

நாட்டில் ஏற்கெனவே வேலை நடைபெற்றுவரும் 29 ஸ்தாபனங்கள் தவிர, ஆண்டு ஒன்றுக்கு அதிகப்படியாக 86·7லட்சம்டன் சிமிண்ட் உற்பத்திக்கு வகை செய்யக் கூடியபடி புதிதாக, 25 ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதற்கும் ஏற்கெனவேயுள்ள 29 தொழிற்சாலைகளை விஸ்தரிப்பதற்கும், இதுவரை 54 திட்டங்களுக்கு இந்திய சர்க்கார் அனுமதியளித்துள்ளனர்.

"சிறு தொழில் எது?"

"சிறு தொழில்" எது என்பதுபற்றி தென்னிந்திய வர்த்தக சபைக்கு இந்திய சர்க்கார் கைத் தொழில், வர்த்தக இலாகா உதவி டைரக்டர் விளக்கம் கூறியிருக்கிறார்.

சிறு தொழில் ரகத்தைச் சேர்ந்த தொழிற்சாலையில் 50 தொழிலாளருக்குக் குறைவாக வேலை செய்ய வேண்டும். அதில் மின்சார சக்தியினல் இயங்கும் இயந்திரங்களும், கருவிகளும் உபயோகிக்கப்பட வேண்டும். தொழிற்சாலை கட்டப்பட்டுள்ள நிலம்; கட்டிடம் அதன் இயந்திர சாதனங்கள் முதலிய எல்லாவற்றிற்குமாகச் சேர்த்து ரூபாய் 5 லட்சத்துக்குமேல் முதலீடு செய்யப்பட்டிருக்கக்கூடாது. இந்த லட்சணங்களோடு கூடிய தொழிற்சாலை சிறு தொழிற் சாலையாகக் கருதப்படும்.

ஒவ்வொரு கைத்தறியும் 3 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. இவ்விதமாக இத் தொழிலில் 75 லட்சம் மக்களுக்கு வேலை கிடைக்கிறது. இந்தியாவிலுள்ள இதர தொழில்கள் எல்லாவற்றிலுமாகச் சேர்த்து இதே எண்ணிக்கையுள்ளவர்களுக்குத் தான் வேலை கிடைக்கிறது.

* * *

1957 ஆரம்பத்தில், நாட்டில் சிமிட்ண் உற்பத்தி சக்தி 57 லட்சம் டன்னுகவிருந்தது. அந்த ஆண்டு இறுதியில் 66.3 லட்சம் டன்னுகப் பெருகிவிட்டது.

கலையகம்—ஓர் அற நிலையம்

வாழ்வித்து, வாழ்க — அதன் குறிக்கோள்

✻

நாடக, சினிமா நடிப்புப் பயிற்சி இலவசமாக அளிப்பது கலையகத்தின் இலட்சிய சேவைகளில் ஒன்று.

விவரத்துக்கு, முகவரியுடன் கூடிய அஞ்சல் உறை அனுப்பவும்.

டைரக்டர்.

கலையகம்.

15/3 வைகுந்தபுரம் தெரு—சென்னை-17.

போன் நெ. 85206. தந்தி: "AKILAM"

ஸ்ரீ ஜெயபாரதம் பிரம்பு நாற்காலிகள் பல வருடங்களாக நாணயமாகவும், நயமாகவும், அழகாகவும், முதல் தரமான பிரம்பினுலும், ஊக்கமான உழைப்பினுலும், பொருத்தமான அளவினுலும், கண்ணைக் கவரும் பல ரக எனமல் வர்ணங்களுடன் தங்கள் அழகான பங்களா, கார்டன், கிளப், ஆபீஸ், சினிமா, ஸ்டுடியோ முதலிய இடங்களுக்கு தங்கள் மனத்திருப்திக்கு ஏற்றவாறு தயாரித்துக் கொடுத்துவருகிருேம்.

காட்லாக் வேண்டுவோருக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

ஸ்ரீ ஜெயபாரதம் & கம்பெனி

(ரிஜிஸ்டர்ட் நெ. 174558)

182, ராயப்பேட்டை ஹைரோட்,

சென்னை-14.

உயர்ந்தரகம், உறுதியானவை

"திண்டுக்கல்"

ஸ்டீல் டிரங், சூட்கேஸ், கேபிள் ரகங்கள், வாளிகள், விவசாயக் கருவிகள், கீல் சட்டங்கள்,
இரும்பு கிராதிகள், நெல் அவியல் டாங்குகள், தண்ணீர் டாங்குகள்,
தங்களின் ஆர்டரின் பேரில், சுத்தமாக தயாரித்து கொடுக்கிருேம்.

M. கருப்பணன்.

சென்னை அரசினர் உதவி பெற்ற

லக்ஷ்மி டிரங்க் டிப்போ

99, மெயின் ரோடு,

திண்டுக்கல்.

ராசி பலன்

வி. வெங்கட்ராமன்

மேஷம்

(அசுவணி பரணி கார்த்திகை ¼)

இந்த -ராசியாதிபர்கள் யோக அம்சம் கவனிக்குமளவில் வியாழமூர்த்தி திருஷ்டியினுல் சகல கஷ்டங்கள் இடைஞ்சல்களின் துன்பத்திலிருந்து தப்பி வாழ்க்கைத்தரம் நடத்திக்கொள்ள முற்போக்கி லிருக்கிறது சனிபகவான் சஞ்சரிக்கும் போக்கு சில சமயங்களில்வீண் வழக்கு,குடும்பத்தொல்லை கள் ஏற்படும், வீடு,கட்டடம், வழக்குகள் இடம் மாறுதல் உண்டாகும். சினிமா, சங்கீதம், கார், தொழில், வர்த்தகம், உத்தியோகம் செய்யும் ராசிக்காரர்களுக்கு திடும் பிரவேசமாக வருமானம், கீர்த்தி, புகழ் வெளியூர் பிரயாணம் இவைகள் ஏற்படும் கூடுமானவரை நவகிரக வழிபடுதல் தீபம் போடுதல் நலம். கடும் செலவு ஏற்படும். விவாகம் செய்துகொள்ள வரும். நல்ல நாட்கள், 1,3,4,9,14. கெட்ட நாட்கள் 2,7,11,12.

ரிஷபம்

(கார்த்திகை ¾ ரோகிணி 1 மிருகஷீரிஷம் ½)

இந்தராசியாதிபர்களின் நிலவரம் செவ்வாய் 11ல் இருப்பதால் மனதில் எண்ணிய எண்ணங்கள், லக்ஷியங்களை பயன்படுத்திக் கொள்ள நல்லசக்தியையும் திறமையையும் சாதகமான சூழ்நிலையாக இருக்கிறது. நண்பர்கள் உதவி மூலம் முயற்சியினுலும் லாபம் அடைவதற்கு எற்றதருணமாகும் குடும்பத்தில் சௌகரியம், சுமுகமானவாழ்க்கை வாழ்க்கைத்தரம் சரிவர நடத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும் சந்ததி சந்தானங்கள், லாபகரம் அடையவரும் உடல் நிலை சில சமயங்களில் உஷ்ண சம்மந்தம் ஏற்படும். சினிமா, சங்கீதம், தொழில், உத்தியோகம் செய்யும் நேயர்களுக்கு வரவு செலவு சரிகட்டுவதற்கு குறைபாடுகள் உண்டாகும், சில சமயங்களில் நண்பர்கள் ஆதரவும் அபிமானம், வெளியூர் பிரயாணம் ஏற்படும்.நல்ல நாட்கள் 4,8,9,11 கெட்டநாட்கள் 1,3,6,12.

மிதுனம்

(மிருகசீரிஷம் ½ திருவாதிரை புனர்பூசம் ¾)

இந்தராசிக்காரர்களுக்கு சுபகிரகங்களின் பார்வைபலமாக இருப்பதினுல் சகல வித நல்மைகள், புகழ், கீர்த்தி, பணம், மனதுக்கு இனிய சிநேகிதம் இவைகள் வெற்றிகரமாக அனுபவிக்க சௌகரியமாயிருக்கும் செவ்வாய் தசமத்தில் இருப்பதினுல் பெரிய மனிதர்கள் விஸ்வாசமும் அவர்கள் ஆதரவு பலமாக பயன்படுத்தி காலம் குதூகலமாக போக ஏற்ற தருணமாக இருக்கிறது. சினிமா, சங்கீதம், ஜீவனம், உத்தியோகம், தொழில் செய்யும் நண்பர்களுக்கு மேலதிகாரிகளின் நட்பும் முன்னைவிட லாபகரமாகஅனுபவிக்க தகுதியும்உல்லாசமான வாழ்க்கையும் அனுபவிக்க உண்டாகும். நல்லநாட்கள் 7,8,9,10,11, கெட்டநாட்கள் 3,4 5.

கடகம்

(புனர்பூசம் ¼ பூசம் ஆயில்யம்

இந்தராசியயாதிபர்கள் முதல் ஆரம்பம் சுமுகமான நாட்களாக ஆரம்பமாகிறது. ஆயினும் பணவிஷங்களில் நண்பர்களின் விவகாரங்கள், கோர்ட்டு கேஸ். இவைகளின் கவலைகள் மனஸ்தாபங்கள் பணமுடை இவைகள் எதிர்ப்பார்க்கலாம் முடிவில் நன்மையாக சித்தி பெறும் செவ்வாய் பகவானின் அனுக்கிரகத்தினுல் உத்தியோகம் குடும்பம் இவைகள் அதிக அக்கரையும் புதிய முயற்சியும் உண்டாகும் திடீரென்று சிலவுகட்டு மீறி கடும் செலவுகள் ஏற்படலாம் நிர்வகிக்கவும் முடியும் புதிய நண்பர்கள் மூலம் வருவாய் வருவதற்கு வழிகள் தென்படலாம் சகோதர் அன்பார்ந்த நண்பர்கள் இவர்களுடன் தகராறுகள், வீண் மனஸ்தாபங்கள் வரும் பொறுமையுடன்மை அமைதியைக் கைபிடிக்கவேண்டும். கூடுமான வரையில் ஆலய வழிபாடு செய்வது நன்மை. நல்ல நாட்கள் 1,2.3,4, 11,12,14, 15. கெட்டநாட்கள் 5,6,7,

சிம்மம்

மகம் பூரம் உத்திரம் ¼

.. இம்மாதம் இந்த ராசிக்காரர்களின் நிலவரம் கவனிக்குமளவில் நண்பர்களுடன் மனஸ்தாபம், வீண் வழக்கு, குடும்பத் தொல்லை வருமானக்குறைவு இவைகள

உண்டாகும் பின்பாதியில் கூடுமான வரையில் செவ்வாய் பலமான தன் சொட்க்ஷேத்திரத்தில் சஞ்சரிப்பதினால் உத்தியோகம். நாணயம், கவுரவம், புகழ், சிறக்கும் வழியில் பிரக்யாதியுடன் படிப்படியாக முன்னணியில் சோபிக்கவும் ஏற்ற வாய்ப்பு தருணம் சில சமயம் கோபம்மனப்பொறுமைஅமைதியாக இருக்க அமைதியை அனுஷ்டிக்கவும் புதிய நண்பர்கள் சிநேகிதம், பொருள் சேர்மானங்களில் முன்னுக்குவரும் சந்தர்ப்பங்களும் சாதகமாக அடைய வாய்ப்பு வரும். சூரியன் பலத்தினால் வெற்றி கிடைக்கும் நண்பர்கள் பல்மாக ஆதரவுடன் புதிய முயற்சிகளுக்கு பாத்திரமாக விளங்கலாம் மேலிடத்தார்கள் ஆதரவு உதவியுடன் நற்பலன்கள் அடைய முதலாளிகள் அபிமானம் பெற்று நன்கு குதூகலமாக அடையலாம். நல்ல நாட்கள் 3,4,5, 10.11,13,15 கெட்ட நாட்கள், 7,8,9.

கன்னி

உத்திரம் ¾ அஸ்தம் சித்திரை ½

இந்த ராசிக்காரர்களுக்கு செவ்வாய் சரியில்லை சனி, குரு பலமாக இருப்பினும் சூரியன் சஞ்சாரம் இவைகளின் நிலைமையில் ஓரளவு எல்லாவிவகாரங்களிலும் சற்று ஓங்கியே இருக்கும். மேலிடத்து நண்பர்கள் அதிகாரிகள் இவர்களால் அனுகூலம்பொதுவில் எதிர்ப்பு இன்றி விவகாரங்களை நடந்தி செல்வதும் முக்கிய அம்சமாகும். உத்தியோகம் தொழில் விஷயங்களில் நல்ல புகழ், நாணயம், கீர்த்தி, அந்தஸ்து ஆகியவற்றை அடைவதற்கு சாதகமாக இருக்கிறது. கவர்ன்மெண்டு உத்தியோகம் செய்யும் நண்பர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவும், அன்பும் திருப்திகரமாகவும் மனசந்தோஷமாகப் வாழ்க்கைத்தரம் சவுகரியமாகவும் இருக்கும் செவ்வாய்பார்வையினாலும் சில சமயங்களில் குடும்பத்தில் மனைவியின் சௌகரியம், சுகம் உடல் நிலை திருப்திகரமாக இராது. சில சமயம் மேலதிகாரிகளின் கருத்து வேற்றுமைகள் அபிப்ராய பேதம் தப்பான எண்ணங்கள் ஏற்படும். கூடிய வரை பொறுமை, மன அமைதியை கையாளவேண்டும் நல்லநாட்கள் 5,6,7,8,9 கெட்டநாட்கள் 10,11,12.

துலாம்

(சித்திரை ½ சுவாதி 1 விசாகம் ¾

இந்தராசிக்காரர்களின் நிலைமையைப் பற்றிகவனிக்குமளவில் செவ்வாய் பலத்தினால் ஊக்கமும், மேலதிகாரிகள் நண்பர்கள் புதிய சிநேகிதர்கள் விசுவாசமும் அவர்களின் ஆதரவும் உற்சாகமும் ஏற்படும். ஆயினும் மற்ற கிரகங்களின் நிலைமை சரியில்லாதபடியால் ஓரளவு சுகமும் கஷ்டமும் கலந்தே அனுபவிக்க வரும். திசாபுத்திகள் பலமாக இருப்பதால் எல்லாவிதமான வழியிலும் முன்னேற்றத்திற்கு சாதகமான சுகமாக வழிகள் ஏற்படும். பந்துக்கள் ஆதரவில் உதவியும் ஏற்படும். ஓரளவு பணவிவகாரங்களில் செலவு வகையில் கட்டுப்பாடுடன் இருக்க சரிபோகாது. திட்டம் போட்டு செலவு செய்தால்கூட கடன் வாங்கி செலவு செய்யசந்தர்ப்பமும் வாய்க்கும். நண்பர்கள் மூலம் அடிக்கடி கடன் வாங்கி செலவு செய்து சரிசெய்ய ஏதுவாகும் மன அமைதியை பொறுமையுடன் நிர்வகிக்க நல்லது. ஸ்தானபேதம் இடம் மாறுதல் உண்டாகும் நல்ல நர்ட்கள், 1,2.3 7.8-9 கெட்டநாட்கள் 13,14,15.

விருச்சிகம்

(விசாகம் ¼ அனுஷம் கேட்டை)

இந்த ராசியாதிபர்கள் நிலைமையில் பார்க்குமளவில் எல்லாகிரகங்களின் போக்கும் சரியில்லை. கூடுமான வரையில் முன் யோசனையுடன் நடந்து கொள்வது அவசியமாகும்.

எதிர்க்கால திட்டத்தை நிறைவேற்றுவதைக் குறித்து தன்நம்பிக்கை இல்லாமல் போதல் சமய சந்தர்ப்பங்களால் பயன்படுத்திக்கொள்ளக்கூட தகுதியற்ற நிலைமை வாய்க்க ஏதுவாகும். பின்பாதியிலிருந்து ராசியாதிபர்கள் தன் சொந்த வீட்டு ஆக்ஷியில் சஞ்சரிப்பதினால் கூடிய வரையில் நண்பர்கள் தகுந்த உதவி செய்து ஆலோசனை சொல்லி சகாயம் பணம் உதவி செய்துநல்ல முறையில் சவுகரியம் அடைய ஏதுவாகும். புதிய முதலீடு வாங்கவும், கடன் வாங்கவும் சரிபோகும். இடம் மாறுதல், வீண் வழக்கு தகராறுகள் உண்டாகும். திருப்தியில்லாத வாழ்க்கை நடத்தவரும். கலகமும் விரோதமும் அனுபவிக்க வரும். பொறுமை வேண்டும். நல்லநாட்கள் 3,4,5,10,11, 12 கெட்ட நர்ட்கள் 2,6,7,

தனுசு

மூலம் பூராடம் உத்திராடம் ¼

இந்த ராசியாதிபர்களின் நிலையை பார்க்கும் சமயம் சூரியன் செவ்வாய், சனி இவர்கள் பலன் சுபமான சவுகரியங்களுக்கு முரண்பாடாக நடக்க ஜதுவாகும், குருவின்

பலம் திசாபுத்தி பலமாக இருப்பின் எல்லா விதமான விவகாரங்களிலும் மன நிம்மதி அளிக்கும் வகையில் இருக்கிறது. சூரியன் 7ம் வீட்டிலும் செவ்வாய் நாலாம் வீட்டினுலும் சனி 12ம் வீட்டிலிருப்பதினுல் வாழ்க்கை, மனைவி விஷயங்களால் சந்தோஷமாகவும், திருப்தியாகவும், வாழ்க்கைத் தரமாக நடக்க இயலாது. கஷ்டமும் நஷ்டமும் மன வருத்தமும் அடிக்கடி கலந்தே அனுபவிக்க நேரிடும். செலவுகள் கடுமையாக ஏற்படும். கட்டுக்கு அடங்கி செலவுசெய்ய வாராது. கடன் வாங்கிகூட செய்யவரும்உத்தியோகம் செய்யும் ராசிக்காரர்களுக்கு மேலதிகாரிகளின் அன்பு, ஆதரவு, அபிமானம் எதிர் பார்க்கலாம் பின்பாதியில் ஓரளவுசாதகமான பலன்களை அனுபவிக்கவும் சுகமும் சந்தோஷமும் உண்டாகும் கூடுமானவரையில் கடுமையாக உழைத்தாலும் கூட உழைப்பிற்கு தகுதியான பலன் கிடைக்காது அமைதியும் பொறுமையும் கையாண்டுவருவது நலம் நல்ல நாட்டகள் 5,6,7,13,14,15 கெட்ட நாட்கள் 8, 9.

மகரம்

(உத்திராடம் ¾ திருவோணம் 1 அவிட்டம்)

இந்தராசிக்காரர்களுக்கு பொதுவாக எல்லா விஷயங்களையும் கவனிக்கும் நிலையில் அந்நிய புதிய சிநேகிதர் மூலம் தொடர்பு ஊழியர், வேலையாட்கள், சிப்பந்திகள் இவர்களால் அந்யோன்ய நட்பு, தேக ஆரோக்யம் ஜீவன வழியில் அதிக ஊக்கம் இவைகள் உண்டாகும் பழைய கணக்கு விவகாரங்கள் கோர்ட்டு விஷயம், சாமாதானமாக போகும் பிரத்தியார் நண்பர்கள் உறவினர்களின் நிர்வாகம் தான் ஏற்று பரிசீலனை செய்வித்தல் நேர்மையான முறையில் ஒழுங்கு செய்து அதனுல் நன்மைபெறுதல் உத்தியோகப் செய்யும் நண்பர்களுக்கு மேலதிகாரிகளின் விசுவாசம், சம்பள உயர்வு, வெளியூர் மாறுதல் உயர்வான பதவியை வகிக்கவும் ஆள் அடிமை, வாகனம், உல்லாச பிரயாணம் இவைகள் கிடைக்கும். பணக்கஷ்டம் கடன் வாங்கிக் கொடுத்து நன்மையடைய ஏதுவாகும். நல்ல நாட்கள் 7,8,9,14,15, கெட்ட நாட்கள் 1,2,3,4.

கும்பம்

(அவிட்டம் ½ சதயம் 1 பூரட்டாதி ¾)

இந்த ராசியாதிபர்கள் பலமாக இருந்த போதிலும் சகல விதமான வெற்றிகளுக்கு தாமதமாக பலன் கொடுக்கும். நிலைமை வீண்மனக்கஷ்டம், கோள், மறைமுகமான விரோதங்கள், மேலதிகாரிகள் நண்பர்களிடம் மனவேற்றுமை உண்டாக்கும். பணவிவகாரங்களில் மனம் சாத்மீகமாக இருக்கவும் தாத்வீகமாக இருக்கவும் கவலையைத் தரும். நிலைமை உள்ளூர உண்டாகும். வெளியூர் பிரயாணங்கள் ஆலய வழிபாடு விவாக பேச்சுக்கள் செய்ய எண்ணம் எண்பிக்கும். சிநேகிதர்கள் மூலம் அதிக ராஜபோகமான கீர்த்தி, புகழ், இவைகள் வாய்க்கும். பின் பாதியில் திடும்பிரவேசமாக சந்தோஷமாக பரஸ்பர அன்யோன்யம் உண்டாகும். பணம் வர்த்தகம், வியாபாரம், சினிமா, சங்கீதம் ஜீவனம் செய்யும் நண்பர்களுக்கு நன்மையடையவும், உல்லாச பிரயாணம் செய்ய மகிழ்ச்சிக்கு ஏற்றதருணமுண்டு. மன அமைதியை கைபிடிப்பது நலம், கோபம் அளவுக்கு மீறி வருவதற்கு வாய்ப்பு உண்டாகும் மனதிற்கு கஷ்டமும் சந்தோஷமும் கலந்து நிகழும். நல்ல நாட்கள் 4,7,9,14.16, கெட்டநாட்கள் 1,2,3,11,12

மீனம்

(பூரட்டாதி ¼ உத்திரட்டாதி ரேவதி)

ராசியாதிபர்களின் நிலைமைமை சிந்திக்கும் அளவில் வெளியூர் பிரயாணம் ஜிவனம், தொழில், உத்தியோகம் செய்யும் ர்சியாதிபர்களுக்கு, மேல் அதிகாரிகள் குற்றத்திற்கு ஈடுசொல்ல முடியாத நிலைமையில் இடம்விட்டு மாறிபோகும் சந்தர்ப்பமும் உண்டாகும். எதிர்ப்புகளை நிர்வகிக்க முடியாது வீட்டில் உள்ளவர்களிடம் ஒற்றுமையுடன் அந்யோன்ய பாவத்தில் சவுகரியமாக நிர்வாகம் நடத்திக் கொள்ளவும் கருத்து மாறுபாடுகள் உண்டாகும். பணவிவகாரம் ஓரளவு சமாளித்துக்கொள்ள வாய்ப்பு உண்டாகும் விவாக பேச்சு விஷயங்களில்கருத்து வேறுபாடான கலகம், கோள், குழப்பம் இவைகள் ஏற்பட்டு பின்பாதியில் சவுகரியம் உண்டாகும். அமைதியுடனும் பொறுமையுடனும் பழகிவந்தால்கூடிய வரையில் நிர்வகிக்க முடியும். சௌஜன்யமாக இருக்க சரிவரும் நல்ல நாட்கள் 3,4,5 12,13,14 கெட்ட நாட்கள் 6,7,8.

சர்வ ஜனோ சுகினோபவந்து

சுபமஸ்து.

144850.

பெரிய கோவில்

அருணசலம் பிக்சர்ஸ்: வெற்றிப்படமான 'தைபிறந்தால் வழிபிறக்கும்' என்ற படத்தைத் தயாரித்த இவர்கள் அடுத்ததாகப் 'பெரிய கோயி'லைத் தயாரிக்கின்றனர். எம். என். ராஜம், கண்ணும்பா, பிரேம், சலம் சந்திரகாந்தா முதலியோர் நடிக்கும் இப்படம் பாரமவுண்டில் வளருகிறது. கதை, வசனம், டைரக்ஷன், தயாரிப்பு: ஏ. கே. வேலன், பாடல்மருதகாசி, சங்கீதம்: கே. வி. மகாதேவன்.

அகல் விளக்கு

மதுரம் பிக்சர்ஸார்:ராஜேந்திரன் ஈ. வி. சரோஜா, வி. ஆர். ராஜகோபாலன், எஸ். வி. சகஸ்ரநாமம் முதலியோரைக் கொண்டு பாரமவுண்டில் தயாரிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு மும்முரமாக நடைபெறுகிறது. இப்படத்தின் வெளிப்புறக் காட்சி சமீபத்தில் மாமல்லபுரத்தில் நடைபெற்றது. டி. எஸ்'ராஜகோபால் 'டைரக்ட்' செய்யும் இப்படத்திற்கு ஸ்ரீதர் வசனம் எழுதுகிறுர், சங்கீதம்: சலபதிராவ், இப்படத்தை என். எஸ். கே. மதுரத்தின் சகோதரர் டி. ஏ. துரைராஜ் தயாரிக்கிறுர்.

குறவஞ்சி

மேகலா பிக்சர்ஸ்:மு.கருணநிதியின் கதை வசனங்களைக் கொண்ட இப்படத்தைப் பார்மவுண்ட் ஸ்டுடியோவில் எ. காசிலிங்கம் டைரக்ஷனில் தயாரிக்கின்றனர். ராஜேந்திரன் ராஜசுலோசன, பண்டரிபாய், மைனுவதி, வனஜா, வஹாப் காஷ்மீரி முதலியோர் நடிக்கின்றனர்.

கிரேக்கப் பேரறிஞர் சாக்ரட்டீஸ் வேடத்தில் புதுவை தங்கராசு

சென்ற இதழில் 'முன்னுக்குவருபவர்' பகுதியில் இவரைப்பற்றி எழுதும்பொழுது வாஹினி ஸ்தாபனத்தார் நடத்திய நடிப்புப் போட்டியில் வெற்றி பெற்றவர் என்று குறிப்பிட்டிருந்தோம். இதற்கு ஒரு விளக்கம் "புதுமுக அறிமுகத்திட்டத்தின்" கீழ் பேசும்பட ஸ்தாபனத்தார் விஜயா பூங்காவில் நடத்திய போட்டியிலேயே திரு. தங்கராசு பங்குகொண்டார்; அவர் நடிப்புத்திறனை பட உலகப் பிரமுகர்களாலும், டைரக்டர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டது.

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press 30, Edapalayam Street, Madras-3.